இனி இது இரகசியம் அல்ல!

'பொல்லுக் கொடுத்து வாங் கில் கட்டுவது' என்ற பேச்சு மொழி நம் மத்தியில் உள்ளது அல்லவா? தமிழரசுக் கட்சி எம்.பி. ஒருவர் நேற்று தமது கட்சிக் கூட்டத்தில் இப்படி செமையாக வாங்கிக் கட்டி யிருக்கின்றார்.
யாழ் வந்த பக்கம் 03

பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 22 | திங்கட்கிழமை 08.10.2018 | கதிர் 336

# அரசியல் கைதிகளை விடுவிக்க களமிறங்குகின்றது கூட்டமைப்பு



## கொழும்பில் பெரும் போராட்டம் நாளை எம்.பிக்கள் ஆலோசனை

கொழும்பு, ஒக்ரோபர், 08

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இவ்வாரம் கொழும்பில் பாரிய போராட்டம் ஒன்றை மேற்கொள்ளப்போவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்று தெரிவித்தார்.

அத்துடன் அரசியல் கைதிகள் தொடர்பில் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுப்பதற்காக கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பக்கம் 10



## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை விலக்கும் நடவடிக்கை ஆரம்பம்

### மாற்றுச் சட்ட மூலம் நாளை நாடாளுமன்றுக்கு

கொழும்பு, ஒக்.08

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு மற்றும் நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு என்பன நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளன.

1979ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாததடைச்சட்டத்துக்கு மாற்

பக்கம் 10

## வடக்கு - கிழக்கில் சகலருக்கும் வீடு

### யாழ்.வந்த அமைச்சர் சஜித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 08

வடக்கு - கிழக்கில் வீடுகளற்ற சகல குடும்பங்களுக்கும் எந்த வித பாகுபாடுமகளுமின்றி காணிகள் மற்றும் வீடுகள் வழங்குவதே நல்லாட்சி அரசினதும் தனதும் நோக்கம் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறைஅமைச்சர்சஜித்பிரேமதாச யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.


செமட்ட செவன திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 135ஆவது மாதிரிக்

பக்கம் 10

## வாசகர்கள் கவனத்துக்கு!

தவிர்க்க முடியாத தொழில் நுட்ப நெருக்கடிகளால் இன்றைய **'காலைக்கதிர்'** நாளிதழ் 16 பக்கங்களுக்குப் பதிலாக 12 பக்கங்களிலேயே வெளிவருகின்றது. வாசகர்கள் பொறுப்பார்களாக!

## மைத்திரியுடன் பேசவேயில்லை; அடியோடு மறுக்கிறார் மஹிந்தர்



கொழும்பு, ஒக். 08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், தனக்குமிடையே சந்திப்பு நடைபெற்றது என வெளியாகியுள்ள தகவல்களை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நிராகரித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்குமிடையிலான முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று

பக்கம் 10

## மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கி இடைக்காலக் கண்காணிப்பு அரசு!

### அவரோடும் பஸிலோடும் மைத்திரி மந்திராலோசனை ரணிலின் நல்லாட்சிக்கு முடிவு கட்டுவதற்கும் முடிவு

கொழும்பு,ஒக்.08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், மீண்டும் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் சந்தித்துப் பேச்சு நடத்துவர் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவும், மைத்திரிபால சிறிசேனவும்,

பக்கம் 10

## மைத்திரி, கோட்டா கொலை முயற்சி: டி.ஐ.ஜி. நாலக டி சில்வா எந்நேரமும் கைதாகலாம்!


கொழும்பு, ஒக். 08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய

பக்கம் 10

## நாடாளுமன்றத்துக்கும் வெள்ள அபாய நிலை

### முன்னேற்பாடுகள் தீவிரம்



கொழும்பு, ஒக். 08

நாட்டில் பலபாகங்களிலும் அடைமழை பெய்துவரும் நிலையில், நாடாளுமன்ற வளாகமும் வெள்ளத்தில்

பக்கம் 10

## மைத்திரி - மஹிந்த சந்திப்பு; கசிந்தது உள்வீட்டுத் தகவல்

கொழும்பு, ஒக். 09

"அரசியலில் மாற்றங்கள் நடந்தன. பல விடயங்கள் நடந்தேறின. அவை ஒருபக்கம் இருக்கட்டும். ஆனால், இப்போது இந்த நிமிடத்தில் நீங்கள்தான் நாட்டின் ஜனாதிபதி. அதனை நாங்கள் மதிக்கிறோம். உங்களின் உயிருக்கு



குறிவைக்கப்பட்டுள்ளது. அது மிகவும் பாரதூரமானது. ஆனால், அது பற்றி பிரதமரோ அல்லது பொலிஸ்மா அதிபரோ மௌனம் காத்து வருகின்றனர். எங்களையும் பழிவாங்கிப் பல வீனப்படுத்தி, உங்களையும் - சுதந்திரக் கட்சியையும் - அழிக்க

பக்கம் 10

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பை ஞானசாரருக்குப் பெற முயற்சி

பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் மேன் முறையீட்டு மனுவை உயர் நீதி மன்றம் நிராகரித்ததன் காரணமாகத் தேரருக்கு ஜனாதி

பக்கம் 03

# இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகரை ரஷ்யாவிலிருந்து மீள அழைக்க கொழும்பு தீர்மானம்

## புதிய தூதுவர் தயானின் முறைப்பாட்டை அடுத்து நடவடிக்கை



கொழும்பு, ஒக்.08

**ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவராக அண்மையில் பொறுப்பேற்ற, கலாநிதி தயான் ஜயத்திலகவின் முறைப்பாட்டை அடுத்து, மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய குரூப் கப்டன் சன்ன திசநாயக்க கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.**

**இலங்கை விமானப்படையைச் சேர்ந்த, குரூப் கப்டன் சன்ன திசநாயக்க மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதரகத்தை பிரித்து வைத்திருந்தார் என்றும், தூதரகத்தில் ஒரு பகுதியைப் பாதுகாப்புப் பிரிவு என்று உருவாக்கியிருந்தார் என்றும் தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**

இலங்கைத் தூதரகத்தின் ஒரு பகுதியின் தலைவராக அவர் இருக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த அதிகாரி மொஸ்கோவில் தனது பாவனைக்காக 80 ஆயிரம் டொலர் பெறுமதியான வாகனத்தை இறக்குமதி செய்துள்ளார். இதற்கான கொடுப்பனவுக்கு, இலங்கை விமானப்படைத் தளபதி கபில ஜெயம்பதி அனுமதி அளித்திருக்கிறார் என்றும் தயான் ஜயதிலக குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் மொஸ்கோவுக்குச் சென்றிருந்த இலங்கை விமானப்படைத் தளபதி கபில ஜெயம்பதியிடம், பாதுகாப்பு ஆலோசகர் குரூப் கப்டன் சன்ன திசநாயக்கவுக்கு எதிரான நடவடிக்கை பற்றி கலாநிதி தயான் ஜயதிலக, முதலில் கூறியிருந்தார்.

அதன் பின்னர் அவர் வெளிவிவகார அமைச்சுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பினார். அந்த அறிக்கை அங்கிருந்து பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டது.

இதையடுத்து. விமானியும் இலங்கை விமானப்படையின் முன்னாள் உயர்மட்டத் தளபதி ஒருவரின் மகனுமான, பாதுகாப்பு ஆலோசகர் குரூப் கப்டன் சன்ன திசநாயக்கவை உடனடியாக நாடு திரும்புமாறு கேட்க வெளிவிவகார அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் முடிவு செய்துள்ளன.

அதேவேளை, இந்த விமானப்படை அதிகாரியின் பெயர் வேறுசில பிரச்சினைகளிலும் தொடர்புபட்டுள்ளார் எனப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு சந்தர்ப்பத்தில், இவர் தமக்கு விசிஷ்ட சேவா விபூஷண விருதை தருமாறு விமானப்படைத் தளபதி கபில ஜெயம்பதியிடம் கேட்டிருந்தார். ஆனால் அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

எனினும், அந்த விருது அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஜனாதிபதியின் செயலகத்தின் மூத்த அதிகாரி ஒருவர், மொஸ்கோவில் இருந்த பாதுகாப்பு ஆலோசகருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தை அனுப்பிய அதிகாரி ஜனாதிபதி செயலகத்தில் இருந்த. தற்போது வெளியேற்றப்பட்டுள்ளார்.

அதேவேளை, மொஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு அடிக்கடி சென்று வருகிறார் என்றும், அங்குள்ள இராணுவ அதிகாரிகளுடன் நெருங்கிப் பழகுகிறார் என்றும் இலங்கையின் பாதுகாப்பு ஆலோசகர் மீது மற்றொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. எனினும் அதனை அவர் நிராகரித்திருந்தார்.

இவர் திருப்பி அழைக்கப்படுகின்றமையை அடுத்து, மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் புதிய பாதுகாப்பு ஆலோசகராக, குரூப் கப்டன் உதித்த பிரசன்ன நியமிக்கப்படவுள்ளார். இவர் விமானப்படையின் தொழில்நுட்ப பொறியியல் பிரிவைச் சேர்ந்தவராவார்.

# அரபியக் கடலில் உருவான தாழமுக்கம் விலகுகின்றது

கொழும்பு, ஒக்.08

அரபியக் கடலில் உருவாகியுள்ள தாழமுக்க வலயம் இலங்கையை விட்டு விலகி செல்வதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய காலநிலை தொடர்பில் செய்திச் சேவை ஒன்றுக்குக் கருத்து வெளியிடும் போதே காலநிலை அவதான நிலையத்தின் வானிலை அதிகாரி சூரியகுமார் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் மழையுடனான வானிலை நேற்று தொடர இருந்தது எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதுடன் 237,940 குடும்பங்களை சேர்ந்த 803,516 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். ஐவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக 6 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன, 1,046 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# எந்த அனர்த்த நெருக்கடிக்கும் முகம் கொடுக்க அரசு தயாராம்

கொழும்பு,ஒக்.08

எந்தவோர் அனர்த்த நிலைமைக்கும் முகம்கொடுக்க அரசு தயார் நிலையில் உள்ளது என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜீர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் கனமழை பெய்து வருகின்றது. இதன்காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பான இடத்தில் அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்டவர்களை மீட்கும் நடவடிக்கைகளில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்து செயற்படத்தயார் எனவும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜீர அபேவர்தன தெரிவித்துள்ளார்.



பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொருள்கள் விநியோகிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, களனி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாகவும், இதன்காரணமாக அதனை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொழும்பு, கொலன்னாவை, களனி, பியகம, கடுவலை உள்ளிட்ட தாழ் நில பகுதிகளில் வசிக்கும் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் கோரப்பட்டுள்ளது.

# சப்பாத்துப் பாலத்தை மேவியது வெள்ளம்

## மன்னார் எலுவான்குளத்தில்



நாட்டில் பெய்துவரும் கடும் மழையினால் சப்பாத்துப் பாலம் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மன்னார் - புத்தளம் பிரதான வீதியின் எலுவான் குளம் பகுதியிலுள்ள சப்பாத்துப்பாலம் நீரில் மூழ்கியுள்ளதால் அந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக அந்நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

# நிவாரணப் பணிகளில் இராணுவத்தினர்!

கொழும்பு,ஒக்.08

கடும் மழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற சுற்றுவட்டத்தை அண்மித்த பகுதியில் 60 இராணுவத்தினரும், காலி, பிடிகல, உடுகம, யக்கலமுல்ல பகுதிகளில் 40 இராணுவத்தினரும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள, வெலிபென்ன, மத்துகம பகுதிகளில் நிவாரணங்களை வழங்குவதற்காக 85 இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மழையுடனான வானிலையால் பல பகுதிகளுக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது.

எரிசக்தி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்ஸன ஜயவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

களுத்துறை, பதுரலிய, மத்துகம, அஹலவத்த ஆகிய பகுதிகளில் 3,500 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது.

அத்துடன், பேராதனை, கடுகன்னாவ, கலஹா, கலகெதர பகுதிகளில் 750 வீடுகளுக்குமான மின்சார விநியோகமும் தடைப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புலித் தடையை நீக்கக் கோரி ஏன் வழக்குப் போடக்கூடாது?

## தமிழ்த் தலைமையிடம் அமைச்சர் மனோ கேள்வி

புலிகளை பற்றி மக்கள் மன்றத்தில் பேசிய அப்பாவி பெண் எம்.பி விஜயகலாவுக்கு இருக்கும்தைரியம், இன்றுசட்டத்தரணிகளான தமிழ் தலைவர்களுக்கு இல்லையோ என்றும், முன்னாள் போராளிகளை முன்னிலை படுத்தி வழக்கு பேசினால், அந்த முன்னாள் போராளிகள் ஜனநாயக அரசியலில் எழுச்சி பெற்று விடுவார்கள் என எவரும் அஞ்சுகிறார்களோ என்றும், எனக்கு இது இன்றுவரை புரியாத புதிராக இருக்கின்றது என்றும் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க, அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு டவர் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற, கொழும்பு வர்த்தக மாணவர் சங்க விருது கலை விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அங்கு அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியவை வறுமாறு:-

விடுதலை புலிகள் மீண்டும் வரவேண்டும் என பகிரங்க மேடையில் பேசியதால் இன்று விஜயகலா எம்பி சிக்கலில் இருக்கிறார். ஆனால், நீதிமன்றத்துக்கு போய், புலிகளின் மீதான தடையை நீக்க சொல்லி எவரும் வழக்கு தொடரலாம். வாதங்களை முன் வைக்கலாம். அதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு.

நீதிமன்றத்தில் போய், நீதியின் பாதுகாப்பில் இருந்தபடி, இன்று புலிகள் ஆயுத போரில் இல்லை எனவும், இலங்கையில் வாழும் சுமார் 12,000 முன்னாள் போரளிகளை முன்னிலைப் படுத்தி, அவர்கள் இன்று ஜே.வி.பியை போல் ஜனநாயக வழக்கு திரும்பி விட்டார்கள் எனவும் எவரும் வாதிட முடியும். அதனால் இந்நாட்டு இனப்பிரச்சினை தீர்வுக்கு இருக்கின்ற முக்கியமான தடையையும் கணிசமாகத் தளரும்.

புலிகளின் தலைவருக்கு சமானமாக தம்மை இன்று உருவகித்துக் கொண்டு, புலிகளை பற்றி மறைமுகமாக பேசி பேசியே, அரசியல் செய்யும் தமிழ் தலைவர்கள், முதலில் இந்த புலித் தடையை நீக்க தம் சட்ட அறிவை பயன்படுத்த வேண்டும். ஆனால், இதை எவரும் இதுவரை செய்ய முன்வரவில்லை.

சிங்கள தரப்பில் புலிகள் என்ற பெயர் இன்னமும் அவர்கள் வயிற்றில் புளியைக் கரைக்கிறது. அதுவே இனப்பிரச்சினை தீர்வுக்கு அவர்கள் உடன்படுவதைத் தடுத்து வருகிறது. ஆகவே புலிகளைப் பற்றிய அபிப்பிராயத்தை மாற்ற, நமது சட்டத்தரணி அரசியல்வாதித. தலைவர்கள் சட்டப்படி முயல வேண்டும். இன்று புலிகள் ஆயுதப் போரில் இல்லை என்பதைக் கூறி, ஜே.வி.பியைப் போன்று, ஜனநாயக வழிமுறைக்கு வந்து விட்ட இலங்கையில் உள்ள முன்னாள் போராளிகளை நீதிமன்றத்தில் முன்னிலை படுத்த வேண்டும். ஜே.வி.பியைப் போன்று தமிழ் இளைஞர்கள் அன்று ஆயுதம் தூக்கியதன் பின்னணியில் இருந்த காரணத்தை எடுத்துத் தர்க்கரீதியாகக் கூற வேண்டும். 1972ஆம் ஆண்டின் குடியரசு அரசமைப்புக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட, ட்ரயல்-அட்-பார் வழக்குக்குச் சாமானமாக இந்த வழக்கையும் கொண்டு செல்ல வேண்டும். ட்ரயல்-அட்-பார் வழக்கில் தந்தை செல்வா, ஜி. ஜி. பொன்னம்பலம், திருச்செல்வம் ஆகியோர் முன் வைத்த வாதங்களை போல், இன்றைய சட்டத்தரணி தமிழ் தலைவர்களும் வாதங்களை முன் வைக்க வேண்டும்.

ஜே.வி.பியைப் போன்று விடுதலை புலிகள் இயக்கமும், இலங்கை மண்ணில் செயற்பட்ட ஓர் அரசியல் இயக்கம். அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் இந்த இரண்டு இயக்கங்களும் ஈடுபட்டன. இரண்டும் தடை செய்யப்பட்டன. ஜே.வி.பியின் மீதான தடை நீக்கப்பட்டு, அவர்கள் இன்று நாடாளுமன்றம் வந்து, ஜனநாயகம் பற்றி எங்களுக்கு வகுப்பு எடுக்கிறார்கள். நல்லதுதான். ஆனால் அதே போல், இந்த முறையில் யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் ஆன நிலையில், புலிகளைப் பற்றியும் நாம் பார்க்க வேண்டும். புலிகள் இயக்கத்தில் இருந்தார்கள், செயற்பட்டார்கள் என்ற 12,000 மேற்பட்ட ஆண், பெண் தமிழர்கள் நம் நாட்டிலேயே இன்று வாழ்கிறார்கள். அவர்களில் சிலர் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுகிறார்கள். பலருக்குக் கை, கால்கள், அவயங்கள் இல்லை.

ஆகவே புலிகள் இன்னமும் இருக்கிறார்கள். அவர்கள் ஆயுதம் தூக்கப் போகிறார்கள் என்ற தோற்றப்பாடு உண்மையா, இல்லையா என்பதை பற்றி எடுத்துக்கூற இந்த 12,000 மேற்பட்ட , கை, கால்கள், அவயங்கள் இழந்த, சிறைகளில் வாழ்கின்ற, இன்று தம் சொந்த ஊர்களில் துன்புற்று வாழ்கின்ற முன்னாள் போராளிகளுக்குதான் முடியும். தாங்கள்தான் புலிகள் என்று கூறி புலம்பெயந்த நாடுகளில் வாழும் சில குழுக்களை விட, இந்நாட்டில் இன்று வாழும் இந்த முன்னாள் போராளிகளுக்குத்தான் இந்தத் தார்மீக உரிமை இருக்கிறது. ஆகவே இவர்களது ஆயிரக்கணக்கான, வாக்குமூலங்களை, சத்திய கடதாசிகளை, நமது சட்டத்தரணித் தலைவர்கள் நீதிமன்றத்தில் எடுத்து வைக்கலாமே!

தமிழ் இளைஞர்களை அன்று ஆயுதம் தூக்க வைத்தது, தமிழ் இளைஞர்களது மனநோய் அல்ல. அதன் காரணம், பேரினவாத இராணுவ அடக்குமுறையே ஆகும். இது வரலாற்று உண்மை. ஆனால், இவற்றின் அர்த்தம், புலிகள் பிழையே செய்யாத, விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட அணியினர் என்பது அல்ல. தமிழுலகில் மட்டுமல்ல, முழு உலகிலும் அப்படி யாரும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் கிடையாது.

இன்று புலிகளை மீண்டும் உயிர்பிக்கச் சொல்லிவிட்டார் என்று எம்.பி. விஜயகலாவை போட்டு சட்டம் இறுக்குகிறது. உண்மையில் புலிகள் இயக்கம் ஒரு தடை செய்யப்பட்ட இயக்கமாக இருப்பதால், அதை மீண்டும் உயிர்பிக்கச் சொல்வது சட்ட விரோதமாக பார்க்கப்படுகிறது. ஆனால், புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரலாம். அது தொடர்பில், உலகின் பல நாடுகளில் நடப்பது போல் இலங்கை நீதிமன்றத்திலேயே வழக்கு தொடரலாம். சட்டத்துக்குப் பயந்து மறைமுகமாகப் புலிகளின் பெயரை பயன்படுத்தும் தமிழ்த் தேசியவாதத் தலைவர்கள், அதை ஏன் இன்னமும் செய்யாமல் இருக்கிறார்கள்? இப்போது தேர்தல்காலம் நெருங்க நெருங்க திடீரென பல தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் தேசியப் புலிகளைப் பற்றி அடிக்கடி பேசுகின்றமையை ஊடகங்களில் வாசிக்கிறோம். பார்க்கிறோம். கேட்கிறோம்.

ஆனால், பகிரங்க மேடையில் பேசிய அப்பாவி பெண் எம்.பி. விஜயகலாவுக்கு இருக்கும் தைரியம், புலிகளின் தலைவருக்கு சமானமாக தம்மை இன்று உருவகித்துக் கொள்ளும் வீரர்களுக்கு இல்லையா? நீதிமன்றத்தில் போய், நீதியின் பாதுகாப்பில் இருந்தபடிகூட வாதிட முடியாதா? இது எனக்கு ரொம்ப நாளாக விளங்காத ஒரு புதிர்.

நான் இன்று ஓர் அமைச்சராக இல்லாமலிருந்தால் இதை நானே செய்வேன். நான் அட்டைக்கத்தி வீரன் அல்லன். இதைப்போன்ற பல்வேறு விடயங்களை நான் நெருக்கடி மிக்க களத்தில் இருந்தபடி துணிந்து செய்துள்ளேன். அது மக்களுக்கு தெரியும். இன்று நான் வகிக்கும் பாத்திரத்தில் இருந்தபடி இதை செய்வது உசிதமானதல்ல. அப்படியானால், நான் இதிலிருந்து வெளியேற வேண்டும். அப்புறம் நான் உள்ளே இருந்து இன்று செய்து வரும் பாத்திரம் காலியாகிவிடும். இந்த அரசியல் பரப்பில் ஒவ்வொருவருக்கும் ஒரு பாத்திரம் இருக்கிறது. நானே பல பாத்திரங்கள் வகிக்க முடியாது. அது சினிமாவில் மாத்திரமே முடியும். - என்றார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள அமைச்சரையும் பிரதி அமைச்சரையும் தன் வீட்டுக்கு அழைத்து, யாழ். அரச அதிகாரிகள், ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள் என ஒரு கூட்டத்தை வைத்து, மதுவுடன் இரவு விருந்தளித்து மகிழ்ந்த ஓர் எம்.பி. குறித்து இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் பிரஸ்தாபித்திருந்தேன்.

தமிழினத்துக்காகச் சமராடிய நமது அரசியல் கைதிகள் அங்கு வெஞ்சிறையில் தமது விடுதலைக்காக உண்ணாநோன்பிருக்க, அதேசமயம் இங்கு தென்னிலங்கைச்சிங்கள அமைச்சர்களுக்கு மதுவுடன் இரவு விருந்தளித்த தனது கட்சியின் மக்கள் பிரதிநிதியின் இந்தச் செயலால் மனம் துவண்டு போன கட்சியின் இளம் செயற்பாட்டாளர் ஒருவர் அது குறித்துத் தமது முகப்புத்தகத்தில் பிரஸ்தாபித்தார். "தமிழரசு எம். பி. ஒருவர் கொழும்பு அமைச்சர் ஒருவருக்கும், பரிவாரங்களுக்கும் மதுவுடன் இரவு விருந்தளித்து மகிழ்ந்தமை சரியா? தமிழரசு உறுப்பினர்களே கருத்துக் கூறுங்கள்" – என்ற சாரப்பட அவர் பதிவிட்டிருந்தார். அப்படி விருந்தளித்த 'கொழுப்பேறிய' மக்கள் பிரதிநிதி யார் என்பதை அவர் பெயர் சுட்டிக் குறிப்பிடவேயில்லை.

அந்த இளம் செயற்பாட்டாளர் முகப்புத்தகத்தில் வெளியிட்ட குறிப்பால் சீற்றமுற்ற அந்த அரசியல்வர்த்தகர், போகுமிடமெல்லாம் அந்த இளைஞரை வையத் தவறவேயில்லை.

அந்த இளைஞர் அரச ஊழியர். அவர் முகப்புத்தகத்தில் பதிவேற்றிய விடயத்தை அப்படியே பிரதி எடுத்து சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கொடுத்து, அந்த இளைஞரைத் 'தண்ணியில்லாக் காட்டுக்கு' இடம்மாற்றம் செய்யும்படி 'தண்ணி வார்த்த' அந்தப் பெருவர்த்தகர் கேட்டுக் கொண்டார் என்றும் கேள்வி.

அந்த அமைச்சரையும் வைத்துக் கொணடு அந்த இளைஞர் குறித்து பகிரங்க நிகழ்வில் சாடைமாடையாக விமர்சிக்கவும் அவர் தவறவில்லை.

இந்த முகப் புத்தகப் பதிவு தொடர்பாகத் தனது நாடாளுமன்றச் சிறப்பரிமை மீறப்பட்டுள்ளது என்றும், அதற்காக சிறப்புரிமைக் குழுவிடம் முறையிட்டு அந்த இளைஞர் மீது கடும் நடவடிக்கை எடுப்பேன் என்றும் தனது ஆள்கள் மூலம் மிரட்டியும் பார்த்தாராம்.

அத்துடன்விடவில்லை. நேற்று தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் கட்சியின் முக்கிய கூட்டம் ஒன்று – உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுடன்.

குறிப்பாக, மேற்படி அரசியல் வர்த்தகரின் பிரதேசத்துக்குரிய உறுப்பினர்களின் கூட்டம். அந்த இளைஞரும் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

அவரைக் கண்டதும் அரசியல் வர்த்தகரின் சீற்றம் வேதாளம் மீண்டும் மரத்தில் ஏறிய மாதிரியாயிற்று. கூட்டம் முடிந்துவிட்டது என அறிவித்த போதும் விடாது எழுந்து நான் பேச வேண்டும் என்று பிடிவாதமாக நின்று பேசினார்.

முகப் புத்தக விடயத்தை விவரித்தார். இந்த அரசுடன் நெருங்கி உறவாடி விடயங்களைக் கையாளும்படி எங்களுக்கு வழிகாட்டப்பட்டுள்ளது என்றார். (அப்படிக் கட்சியில் வழிகாட்டியவர் யார் என்று தெரியவில்லை)

அன்று இரவு விருந்தில் சுமந்திரனும் பங்குபற்றி புதிய அரசமைப்பு வரைவு குறித்து அமைச்சருக்கு விளங்கப்படுத்தினார். அந்த விளக்கத்தை ஏற்ற அமைச்சர் அடுத்த நாள் கூட்டத்தில் திரும்பத் திரும்ப அது குறித்து சாதகமாகப் பிரஸ்தாபித்தார் என்று சுட்டிக்காட்டினார் அந்த அரசியல் வர்த்தகர்.

இந்த முகப் புத்தகம் பதிவிட்டவரை நான் விடமாட்டேன். சி.ஐ.டி. மூலம் நான்காம் மாடிக்கு ஏற்றுவேன். அது எனது வேலை. ஆனால் கட்சி இந்த விடயத்துக்கு என்ன சொல்லப் போகின்றது? அவர் மீது (அந்த இளைஞர் மீது) என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? – என்ற சாரப்பட எல்லாம் தாறுமாறாகக் கேள்வி எழுப்பினார்.

ஏற்கனவே இவரது 'தண்ணீர்ப் பார்ட்டி விருந்து' குறித்து அறிந்து மனத்துக்குள் குமைந்து கொண்டிருந்த கட்சியினர் எல்லோரும் அவர் கொடுத்த அந்த சர்ச்சை என்ற பொல்லை வாங்கி அவரை ஒரு பதம் பார்த்துத் தள்ளினர்.

கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய கட்சியின் பொருளாளர் கனகசபாபதி அந்த அரசியல் வர்த்தகரின் பிரதிபலன்களை எதிர்பார்த்து நிற்கும நலன் விரும்பி. அப்படியிருந்தும் கூட்டத்தில் இருந்தோரின் மனக் கொதிப்பை அறிந்து அரசியல் வர்த்தகர் மீது ஒரு பாய்ச்சல் பாய்ந்தார்.

"ஒரு நிமிடம் என்று கேட்டார். நீட்டி முழக்கிவிட்டார். அப்படி விருந்தளித்தது தவறு. அது ஏற்றுக் கொள்ள முடியாதது. தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்துக்கு முற்றிலும் மாறான நடவடிக்கை அது." என்று பகிரங்கமாகத் தீர்ப்பளித்தார் தலைமை வகித்த கனகசபாபதி.

சுமந்திரனும் தன்பாட்டுக்கு ஒரு பிடிபிடித்தார்.

"பிரதமர் என் வீட்டுக்கு வந்தார். நான் விருந்து கொடுத்தேன். யாழ். நுங்கு பற்றி அறிந்திராத அவர் அதனை விரும்பினார். நான் பரிமாறினேன். அப்படி வீட்டுக்கு அதிதியாக வந்தவரை உபசரிப்பது தவறில்லை." என்றார் சுமந்திரன்.

ஆனால், அரச அதிகாரிகளையும், சமதையாகக் கூட்டி வைத்து மது பரிமாறி, பார்ட்டி கொடுப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. இரவு விருந்துக்கு அழைக்கப்பட்டமையால் அங்கு வந்த நான், நிலைமையைக் கண்டு பெரிதும் சங்கடப்பட்டேன். அதனால்தான் உணவு கூட அருந்தாமல் புறப்பட்டேன். இத்தகைய நிகழ்வு ஆரோக்கியமானதல்ல. – என்றும் கொஞ்சம் சூடாகவே கொடுத்தார் சுமந்திரன்.

கடைசியில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும் தம் பங்குக்கு ஒரு பிடிபிடித்தார்.

"மதுஒழிப்பு, புகைப்பிடித்தலை நிறுத்தல் போன்றவற்றை முன்னெடுக்கும் – ஒழுக்கசீலம் பேணும் – பாரம்பரிய கட்சி நமது. இப்படி விருந்து கொடுத்து மது பானம் பரிமாறியமை எமது கட்சிக்கு ஏற்புடையதன்று.

இத்துடன் இத்தகைய விருந்து பரிமாறல் நடவடிக்கையை நிறுத்திக் கொள்ளுங்கள் இனிமேல் இது தொடரக்கூடாது.

இந்த விடயத்தை இதற்கு மேல் விவகாரம் ஆக்காமல் இத்துடன் விட்டு விடுங்கள்.

– இந்தச் சாரப்பட உறுதிபடக் கூறி, முத்தாய்ப்பாய் முடித்தார் கட்சித் தலைவர் மாவை.

கட்சித்தலைவர், கூட்டத்தலைவர், கட்சிப் பேச்சாளர் என ஒட்டு மொத்தமாக எல்லோரும் ஏறி நின்று குத்தியதால் முகத்தைத் தொங்கப் போடுவதைத் தவிர அந்த அரசியல் வர்த்தகருக்கு வேறு வழி இருக்கவில்லை.

"இதனை நாளை பத்திரிகையில் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" – என்றார் அதையே வைத்து 'அரசியல் பிஸ்னஸ்' நடத்தும் அந்த வர்த்தகர்.

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதியின் பொது மன்னிப்பைக் கோரும் நடவடிக்கையில் ஈடுபடப் போகிறார் என சிங்கள ராவய அமைப்பின் அமைப்பாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தம்முடன் இன்னும் பல அமைப்புக்களையும் இணைத்துக்கொண்டு ஜனாதிபதியைச் சந்திக்க நடவடிக்கை எடுக்கவுள்ளார் எனவும் தேரர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியிடம் மன்னிப்பைக் கோரி இதற்கு முன்னர் பொதுபல சேனா அமைப்பும், சியம் பீடத்தின் கோட்டே பிரிவு உட்பட பல அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியும் இதுவரையில் எந்தவித பதிலும் கிடைக்கவில்லை எனவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோனவல சுனில் போன்ற பாதாள உலகப் பிரபலங்களுக்கும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கும் ஜனாதிபதிக்கு மன்னிப்பு வழங்க முடியும் என்றால், நாட்டுக்காகத் தலையீடு செய்த பிக்கு ஒருவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க ஏன்? முடியாது எனவும் தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஞானசார தேரர் தேசியப் பாதுகாப்பு குறித்து வெளிப்படுத்திய உண்மைகள் தற்பொழுது நிதர்சனமாகியுள்ளன எனவும் சுதந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி வெளிநாட்டு விஜயமொன்றில் ஈடுபடவுள்ளமையால், ஜனாதிபதியின் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் ஜனாதிபதியுடன் பேசுவதற்கு நேரம் கோரவுள்ளார் எனவும் தேரர் மேலும் கூறியுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## வினை விதைக்கும் முயற்சி

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக்கு தம்மைத் தூக்கி விட்ட ரணில் விக்கிரமசிங்கவை எட்டி உதைக்கத் தயாராகி விட்டார் மைத்திரிபாலா சிறிசேன.

மஹிந்த ராஜபக்ஷவையும், அவரது அணியில் அரசியல் செல்வாக்கு மிக்கவரும், மஹிந்த தரப்பின் அரசியல் வியூகங்களை வகுக்கும் சாணக்கியர் என்று கருதப்படும் அவரின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷவையும் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரகசியமாகச் சந்தித்துப் பேசினார் என்று தெரிவித்தும் –

அந்தச் சந்திப்பில், பிரதமர் ரணிலின் தற்போதைய அரசை வீழ்த்தி, வீட்டுக்கு அனுப்பி விட்டு, அடுத்த பொதுத் தேர்தல் வரை பரந்த கூட்டமைப்பு ஒன்றை ஸ்தாபித்து, அதன் கீழ் மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராகக் கொண்ட கண்காணிப்பு அரசு ஒன்றை நிறுவுவது குறித்து விரிவாகப் பேசப்பட்டது என்று தெரிவித்தும் –

தற்போது வெளியாகியிருக்கும் செய்திகள், தாம் அரசியல் வானில் உச்சப் பதவிக்கு உயர்வதற்கு உதவிய ஏணியை எட்டி உதைப்பதற்கு மைத்திரிபால சிறிசேன தயாராகி விட்டார் என்பதையே காட்டுகின்றன.

தென்னிலங்கை அரசியலில் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவுத் தளம் வேகமாக வலிமை படைத்து வருகையில், அவரின் விஸ்வரூபத்துக்கு முன்னால் நேரத்துடனேயே அடங்கிப் போவது சிறந்தது – தமது எதிர்கால அரசியல் இருப்புக்கும் பாதுகாப்பானது – என எண்ணி இத்தகைய முடிவை மைத்திரிபால சிறிசேன எடுத்திருக்கக் கூடும்.

ஆனால், யாரிடமிருந்து ஆட்சி அதிகாரத்தைப் பிடுங்க வேண்டும், யாரைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்று 2015 ஜனவரியிலும், பின்னர் 2015 ஒகஸ்டிலும் நாட்டு மக்கள் தேசிய ரீதியில் முடிவெடுத்துத் தமது வாக்குச் சீட்டுகள் மூலம் ஆணை வழங்கினார்களோ, அதற்கு எதிரானதே தமது இந்த முடிவு என்பதை மைத்திரிபால சிறிசேன உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் மஹிந்த ராஜபக்ஷாக்கள் கைப்பற்றி விடக் கூடாது என்ற மக்களின் ஆணையைச் செயற்படுத்துகின்றமைக்காகவே அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அதனைப் பெரும் சாதனை என்றும், தமது அதிகாரத்தைத் தாமே வெட்டிக் குறைத்த பெரும் தியாகம் என்றும் இப்போது வரை அடிக்கடி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்மைத் தாமே புகழ்ந்துரைத்து வருகின்றமை தெரிந்ததே.

அந்த 19ஆவது திருத்தத்தின் அடிப்படை நோக்கத்தைச் சிதறடிக்கும் விதத்திலேயே இப்போது தாம் அரசியல் காய் நகர்த்தல்களைச் செய்ய முற்படுகின்றார் என்பதை அவர் ஒரு தடவை சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

அவருடைய தற்போதைய மந்திராலோசனைத் திட்டம் வெற்றி பெற்று, தற்போதைய ரணிலின் நல்லாட்சி அரசு கவிழ்க்கப்பட்டு, மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராகக் கொண்ட கண்காணிப்பு அரசை ஏற்படுத்தும் முயற்சி செயலுருப் பெறுகின்றது என வைத்துக் கொள்வோம்.

தற்போதைய ஜனாதிபதிப் பதவிக்காலத்தை மைத்திரிபால சிறிசேன பூர்த்தி செய்து அடுத்த ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னரும் கூட இந்த நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிப் பதவியில் இருப்பவருக்கு வராது. அதற்கான அதிகார காலம் 2020 மார்ச்சுக்குப் பின்பே ஜனாதிபதிப் பதவியில் இருப்பவருக்குக் கிட்டும்.

எனவே, மஹிந்தர் இப்போது பிரதமரானால், அவரைத் தமது தற்போதைய ஜனாதிபதிப் பதவி முடியும் வரை மைத்திரி இடை நடுவில் விரும்பினாலும் கூட வீட்டுக்கு அனுப்பவே முடியாத நிலைமையே நீடிக்கும்.

அதாவது, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் போது மஹிந்தர் பிரதமராக அலங்கரிப்பதைத் தடுக்க முடியாமல் போகும்.

19ஆவது திருத்தத்தின் காரணமாக மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாகப் போட்டியிட முடியாத மஹிந்த ராஜபக்ஷ, அந்தத் தேர்தலின் போது – தாம் பிரதமர். பதவியில் இருந்து கொண்டு – புதிதாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி, அவர் பதவியேற்ற கையோடு ராஜினாமாச் செய்தால் அந்த ஜனாதிபதிப் பொறுப்பை உடன் தாம் ஏற்கக் கூடிய உரிமைத் தகுதியோடு இருந்தபடி – அந்தத் தேர்தலில் தமக்காக ஒரு 'டம்மி' வேட்பாளரை நிறுத்தவும், அந்த 'டம்மி' வேட்பாளர் தமது சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவுடன், அந்தப் பதவியை அவரைக் கொண்டு இராஜினாமாச் செய்ய வைத்து, அடுத்துப் பிரதமர் பதவியில் இருக்கும் தான் ஜனாதிபதியாவர் என்று பிரசாரம் செய்யவும், தாம் மீளப் பெற முடியாது எனக் கருதும் ஜனாதிபதிப் பதவியை அவர் விரைந்து பெறுகின்றமையை உறுதிப்படுத்தவும், மைத்திரியின் தற்போதைய அரசியல் நகர்வு உதவப் போகின்றது.

ஜனாதிபதிப் பதவியைப் பறிகொடுத்த மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் இலகுவில் அதனைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கும் விதத்தில் – தமகுத் தாமே மண்ணை அள்ளிப் போடும் விதத்தில் – அரசியல் காய் நகர்த்தல்களை ஆரம்பித்திருக்கின்றார் போலும் மைத்திரிபால. இது, தன் நிலையைத் தானே கெடுக்கும் முயற்சியன்றி வேறில்லை.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மீசாலை அலுவலகம் சாவகச்சேரிக்கு





சாவகச்சேரி, ஒக்.08

யாழ். தென்மராட்சி மீசாலையில் இயங்கிவந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் சாவகச்சேரி நகர்ப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இடமாற்றப்பட்ட அலுவலகத்தின் திறப்பு விழா சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய அலுவலகத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

## தற்போதைய வடக்கு மாகாணசபை 23ஆம் திகதி அமர்வுடன் நிறைவு!

### அன்றைய தினம் முதல்வரின் பிறந்த நாளும் கூட

யாழ்ப்பாணம்,ஒக்.08

வடக்கு மாகாண சபையின் கடைசி அமர்வு, சம்பிரதாயபூர்வ அமர்வாக எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அன்று மாலை மாகாணசபை உறுப்பினர்களுடனான தேநீர் விருந்துபசாரத்துடன் சபையின் செயற்பாடுகள் யாவும் நிறைவுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம், சபையில் தீர்மானங்கள், கேள்விகள், விவாதங்கள் எதுவும் இடம்பெறா. ஒவ்வொரு உறுப்பினருக்கும் 3 தொடக்கம் 5 நிமிடங்கள் வரையில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும். உறுப்பினர்கள் பேசும்போது, நல்லவிதமாக, முரண்பாடுகளை ஏற்படுத்தாத வகையில் பேசுமாறு கோரிக்கை விடுவதாக அவைத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். அன்றைய அமர்வு பி.ப. 4.30 மணியுடன் நிறைவுக்கு வரும் எனவும், தேநீர் விருந்துபசாரம் நடைபெறும் எனவும், அதனுடன் சபையின் செயற்பாடுகள் யாவும் முடிவுக்கு கொண்டுவரப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

அன்றைய தினம் வடக்கு மாகாண முதலமைச்சரின் பிறந்த நாள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவிலிருந்து பாதுகாப்புத் தளபாடங்களை வாங்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை நிலைமை

### அமெரிக்கா விதித்துள்ள தடை உத்தரவினால் ஏற்பட்டுள்ள சிக்கல்

கொழும்பு, ஒக் 08

ரஷ்யாவின் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளால், ரஷ்யாவிடம் இருந்து பெருமளவிலான பாதுகாப்புத்தளபாடங்களை கொள்வனவு செய்யும் இலங்கையின் முயற்சிக்கு, பெரும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

ஜிபார்ட் 5.1போர்க்கப்பல் மற்றும், கவச துருப்புக்காவிகள் (BTRs),எம்.ஐ.-17உலங்குவானூர்திகளை கொள்வனவு செய்வதற்கு, ரஷ்யாவின் Rosboronoexport நிறுவனத்துடன், இலங்கை இரண்டுஉடன்பாடுகளைச்செய்து கொள்வதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்ட Rosboronoexport என்ற நிறுவனம் , ரஷ்ய அரசுக்குச் சொந்தமான ஆயுத ஏற்றுமதி நிறுவனமாகும்.

இந்த நிறுவனம் உள்ளிட்ட இராணுவத் தளபாட விற்பனைகளுடன் தொடர்புடைய ரஷ்ய நிறுவனங்களுக்கு எதிராக, அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது.

2017ஆம் ஆண்டின் தடைகள் சட்டத்தின் கீழ், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், கடந்த ஓகஸ்ட் 2ஆம் திகதி, ரஷ்ய நிறுவனங்கள் மீது தடை விதிக்கும் உடன்பாட்டில் கையெழுத்திட்டார்.

கிரீமிய குடாநாட்டை மீண்டும் உக்ரேனிடம் ரஷ்யா ஒப்படைக்க வேண்டும் என்று அமெரிக்கா கோருகிறது.

அமெரிக்கா தடைவிதித்துள்ள போதிலும், கொழும்பில் உள்ள சில பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், ரஷ்யாவுடன் உடன்பாடு செய்து கொள்வதில் இன்னமும் ஆர்வமாக உள்ளனர்.

அமெரிக்காவுடன் இப்போது, நெருக்கமாக இருப்பதால், அதற்கான விலக்கைப் பெற முடியும் என்று அவர்கள் வாதிடுகின்றனர். எனினும் இந்தக் கருத்தை இராஜதந்திர வட்டாரங்கள் நிராகரித்துள்ளன.

அதேவேளை, அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி, ரஷ்யாவிடம் இருந்து எஸ்.-400 ரகத்தைச் சேர்ந்த, கொள்வனவு செய்யும் உடன்பாட்டில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## உண்ணாவிரதக் கைதிகள் நால்வர் வெலிக்கடை சிறை ஆஸ்பத்திரிக்கு

### உடல் நிலை மோசமடைந்ததால்

கொழும்பு,ஒக்.08

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஏனைய அரசியல் கைதிகளின் உடல்நிலையும் மோசமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பத்து தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், தங்களுக்கு எதிரான விசாரணைகளை விரைவுபடுத்துமாறு கோரியும் கொழும்பு வெலிக்கடை சிறையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 42 தமிழ் அரசியல் கைதிகளும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களில் நால்வரின் உடல் நிலை மோசமடைந்த நிலையில் அவர்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாளை

09.10.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: அத்தம் பி.ப 1.22 வரை
திதி: அமாவாசை மு.ப. 9.43 வரை
சுபநேரம் : 10.32 – 12.02 வரை
இராகுகாலம் : 3.02 – 4.32 வரை

# பழைய முறிகண்டி, தேராவிலில் மாயமாகின்றன புலிகள் காலத்தில் நடப்பட்ட தேக்கம் மரங்கள்!


பழைய முறிகண்டி , தேராவில் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நட்டுப் பேணப்பட்டு வந்த தேக்கம் காடுகள் வகை தொகை இன்றி அறுத்துத் தென்னிலங்கை மற்றும் யாழ்ப்பாணம் நோக்கி எடுத்துச் செல்லப்படுகின்ற போதும் அதிகாரிகள் எவரும் அதனைக் கண்டுகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிப் பிரதேசம் முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில் மற்றும் பழையமுறிகண்டி உள்ளிட்ட பல பகுதிகளிலும் தேக்கம் மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டன. அவ்வாறு பராமரிக்கப்பட்ட வனப் பகுதிகள் போரின் பின்னர் வனவளத் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ளன. இவ்வாறு வனவளப் பகுதியின் ஆளுகையில் உள்ள பிரதேசத்தில் பொதுமக்கள் அத்தியாவசிய தேவை கருதி ஒரு மரத்தைத் தறித்தாலும் அவர்கள் அத்திணைக்களத்தினால் கைது செய்யப்படுகின்றனர். குறித்த வனப் பகுதிகளில் கால்நடைகள் மேச்சலிற்குச் செல்லவும் வனவளத் திணைக்களத்தினர் தடை விதித்துள்ள னர்.

இந்த நிலையில் மேற்படி பகுதிகளில் 1997 முதல் 200ம் ஆம் ஆண்டு வரை விடுதலைப் புலிகளால் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்ட தேக்கம் மரங்கள் தறிக்கப்பட்டு பாரிய மரங்கள் நடுவே மறைத்தும் சிறு மரங்கள் வெளித் தெரியும் வண்ணமும் கடந்த இரு நாள்களாக பகல் வேளையில் தென்னிலங்கை நோக்கி எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வாறு மரங்கள் எடுத்துச் செல்லப்படுவது தொடர்பில் எந்தத் திணைக்களமோ அல்லது பொலிஸாரோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தவிடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரிகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது–

தேராவில் பகுதியில் நீண்டகாலமாக முற்றிய மரங்களை அகற்றி மீள் சுழற்சியில் மரம் நாட்டும் திட்டத்தின் கீழ், முற்றிய மரங்கள் மரக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டன. இதன் அடிப்படையில் அங்கிருந்து மரங்கள் அகற்றப்படுகின்றன. இப் பகுதியில் இன்னமும் சுமார் 20 மரங்கள் அகற்றப்படவேண்டியுள்ளன. இவை நெடுங்கேணி ஊடாக வவுனியாவிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதேநேரம் பழைய முறிகண்டி , ஒலுமடுப் பகுதியில் இருந்து மரம் தறிப்பதற்கோ, அல்லதி அவற்றையாழ்ப்பாணம் எடுத்துச் செல்வதற்கோ எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை –எனப் பதிலளித்தனர்.



# ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் நடவடிக்கை

## தாங்கள் தயார் என்கிறார் மாவை சேனாதிராஜா



ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனவுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப் போவதாக தமிழரசு கட்சியின் தலைவர்மாவைசேனாதிராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக ஜனாதிபதி உள்நாட்டிலேயே தீர்வு காணுவதாகக் குறிப்பிட்டுள்ளமை இந்த உலகத்தை ஏமாற்றுவதற்காகவே எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டியும் கடந்த வெள்ளியன்று முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்திற்கு முன்னால் மாபெரும் கண்டனப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

இந்த நாட்டிலே ஜே வி பியினர் ஆயுதம் ஏந்தி அரசாங்கத்தை கவிழ்த்து ஆட்சியை கைப்பற்றுவதற்கு போராடிய காலத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் அரசியல் கைதிகள் என்ற காரணத்தினால் நம்மவர்களை அரசாங்கம் புறக்கணித்துள்ளது. தமிழ் அரசியல் கைதிகளை விசாரணை நடத்த ஒரு விசேட விசாரணைக் குழுவை அரசு இதுவரை நியமிக்கவில்லை. அவர்கள் எதற்காகப் போராடினார்கள் என்பதன் உண்மைகளைக் கண்டறிந்து அதற்கு தீர்வைக் காண அரசு முன்வரவில்லை.

10 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்க் கைதிகளை வாட்டி வதைத்து அந்த இளைஞர்கள்தமது உயிர்களைப்பணயம் வைத்து சிறைக்குள்ளயே உண்ணாவிரதப் போராட்டம் நடத்த இந்த அரசு வைத்துள்ளது. இவற்றை நாங்கள் தீவிரமாகக் கண்டிக்கின்றோம். அதே நேரத்தில் இந்தச் சிறைக்கைதிகள் நிச்சயமாக மிக விரைவில் விடுவிக்கப்படவேண்டும். அப்படி அவர்கள் விடுவிக்கப்படாத பட்சத்தில் நாங்கள் இவ்வாறாக கண்டனப் போராட்டங்களைக் கொழுப்பிலும் தொடர வேண்டியிருக்கும். அவ்வாறு போராடுவது மட்டுமல்ல சர்வதேச இராஜதந்திரிகளிடத்தில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஆணையாளர்களிடத்தில் முறையிட வேண்டியிருக்கும்.

ஏற்கனவே பல நாட்டு தூதரகங்களில் இந்த விடயம் குறித்து நாங்கள் பேசியிருக்கின்றோம். கடந்த 2015 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவோம், கைதிகளின் விடுதலை தொடர்பில் பொருத்தமான முடிவுகள் எடுப்போம் என்று வாக்குறுதி அளித்து ஐ.நாவில் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது.

ஆனால் கடந்த 25 ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெற்ற ஐ.நா பொது கூட்டத்திலே உரையாற்றிய ஜனாதிபதி உள்நாட்டிலேயே இந்தப்பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணவேண்டும் என்று கூறியிருப்பது இந்தப் பிரச்சனைகள் உள்நாட்டில் தீர்க்கப்படவில்லை என்பதை நிரு பிக்கின்றது.

கடந்த கால அரசாங்கங்கள் ஒரு போரை ஏற்படுத்திய காரணத்தினால் அதன் விளைவுகளால் இன்று சர்வதேசம் தலையிட்டிருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு ஐ.நாவில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐ.நாவில் ஒப்புக் கொண்ட அந்தத் தீர்மானத்திற்கு எதிராக இன்று ஜனாதிபதி உள்நாட்டிலயே தீர்வு காணுவது என்று கூறுகின்றமையை எங்களால் ஏற்றுக் கொள்ளமுடியாது. எங்களை மட்டுமல்ல, இந்த உலகத்தையுமே ஏமாற்றுவதற்காகவே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். இந்த ஆட்சிக்கு எதிராக, ஜனாதிபதிக்கு எதிராக நாங்கள் நடவடிக்கையை சர்வதேச மட்டத்தில் எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

உடனடியாக விரைந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு, குறிப்பாக தமிழ்அரசியல்கைதிகளின்விடுதலைக்கு, அவர் வழி செய்யவேண்டும். புனர்வாழ்வு வழங்கி, பொதுமன்னிப்பில் அவர்கள் விடுவிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

இன்று முல்லைத் தீவில் மக்கள் கூடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். பல மாவட்டங்களில் இந்தப் போராட்டங்கள் தொடர்கின்றன. இதற்கு ஜனாதிபதி செவிசாய்த்து தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் இங்கு கூடியிருக்கின்ற தமிழ்மக்கள் சார்பிலும் நாங்கள் இந்த அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம். – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசமைப்பு சபைக்கு சமலை முன்மொழிகிறார் சம்பந்தன்





கொழும்பு,ஒக்.08

அரசமைப்பு சபையின் உறுப்பினர்களாக, நீதியமைச்சர் தலதா அத்துகோரளவும், முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் நியமிக்கப்படவுள்ளனர் என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நோர்வே மற்றும் பிரித்தானியாவுக்கான பயணங்களை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும், இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசமைப்பு சபைக்கு பிரதமரும், எதிர்க் கட்சித் தலைவரும் இணைந்து, ஐந்து உறுப்பினர்களின் பெயர்களைப் பரிந்துரைக்க வேண்டும். அவர்களில் இருவர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். ஏனைய மூவர், நாட்டின் பிரதான சமூகங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில், சிவில் சமூகப் பிரதிநிதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட வேண்டும்.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் என்ற வகையில் தலதா அத்துகோரளவின் பெயரைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்மொழிவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை, எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் முன்மொழிவார் என்று அறியப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே, தனது தரப்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை கடந்த செப்ரெம்பர் 17ஆம் திகதி அறிவித்திருக்கிறார்.

பிரதமர், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிகளைக் கொண்டிராத கட்சிகளில் இருந்து, இன்னும் ஓர் உறுப்பினரை, நாடாளுமன்றம் தெரிவு செய்ய வேண்டும்.

அதேவேளை, சிவில் சமூக அமைப்புகளின் சார்பில் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் பெயர் அரசமைப்பு சபைக்கு நியமிக்க முன்மொழியப்பட்டுள்ள போதும், அதனை எதிர்க்கப் போவதாக, கூட்டு எதிரணி அச்சுறுத்தியுள்ளது.

சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரினதும் நியமனங்களுக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூன்று பேரின் பெயர்கள் தற்போது ஆராயப்பட்டு வரும்நிலையில், பிரதமர் நாடுதிரும்பியதும், அது முடிவு செய்யப்படும்.

கடந்த அரசமைப்பு சபை செப்ரெம்பர் 21ஆம் நாளுடன் காலாவதியாகியமை குறிப்பிடத்தக்கது.

புதிய பிரதம நீதியரசரைத் தெரிவு செய்தல் உட்பட பல நியமனங்களை அரசமைப்புச் சபை செய்ய வேண்டியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மின்தடை

09.10.2018 செவ்வாய் காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை யாழ். பிரதேசத்தில் மண்டைதீவு, பூம்புகார், மண்கும்பான், அல்லைப்பிட்டி, வெண்புறவிநகர், சோளவத்தை, மண்டைதீவு கடற்படைமுகாம், மண்கும்பான் நீர்ப்பாசன சபை, மண்கும்பான் கடற்படைமுகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் அண்ணா நகர், சிறீநகர், பூந்தோட்டம்கைத்தொழிற்பேட்டை, பூந்தோட்டம் கிராமம், லக்சபான வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும் மன்னார்பிரதேசத்தில் மணல்குளம், இலந்தை மோட்டை,

சூரியகட்டைக்காடு, திருக்கேதீச்சரப் பிரதேசம், மாந்தை சந்தி, நாகதாழ்வு, சிறுநாவற்குளம்

ஆகிய பிரதேசங்களிலும்,

# ஐ.தே.கவுக்குள் சஜித்துக்கு விரைவில் கூடுதல் பொறுப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது அதன் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாசவுக்கு அதிக பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளன எனஅக்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது மாகாண சபைத் தேர்தலை மையப்படுத்தியதாக கட்சியின் பொறுப்புக்களில் மாற்றம் செய்யப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற கட்சியின் அரசியல் சபைக் கூட்டத்தின் போது கட்சியின் மாற்றங்கள் குறித்த பல சமிக்ஞைகள் வெளிப்பட்டன எனவும், இது கட்சியின் எதிர்காலத்தை சிறந்ததாக மாற்றும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நிட்டம்புவ விபத்தில் நேற்று 2 பேர் பலி; மூவர் படுகாயம்

நிட்டம்புவ,ஒக்.08

கொழும்பு – கண்டி பிரதான வீதியின் நிட்டம்புவ, கலபிடிய பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றவிபத்தில் இருவர் உயிரிழந்துள்ளமையுடன், மூவர் காயமடைந்துள்ளனர்.

லொறி ஒன்றும், வான் ஒன்றும் மோதிக் கொண்டதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, மழையுடனான காலநிலை காரணமாக வாகனச் சாரதிகளை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதிவேக வீதியின் பராமரிப்பு மற்றும் நடவடிக்கைப் பிரிவுப் பணிப்பாளர் எஸ். ஓபநாயக்க இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

மணித்தியாலத்திற்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்குமாறும் அவர் சாரதிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

சீரற்ற வானிலை காரணமாக பகல் வேளைகளிலும் இருள் சூழ்ந்திருப்பதால் வாகனங்களின் முன்விளக்குகளை ஒளிரச்செய்தவாறு பயணிக்குமாறும் அவர் வாகன சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தினசரி ராசி பலன் (08.10.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் புரட்டாதி 22 ஆம் நாள் திங்கட் கிழமை. சதுர்த்தசி பகல் 11.32 வரை. பின்னர் அமாவாசை. நட்சத்திரம் உத்தரம் பகல் 1.33 வரை. பின்னர் அத்தம். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 07.29 மணி முதல் 08.59 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 12.01 மணி முதல் 1.31 மணி வரை.

இன்று மஹாளய அமாவாசை விரதம்.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - புரட்டாதி மாத அமாவாசை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - உத்தரம்.

**‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரத்தில் ஆடை,அலங்காரப்பொருளால்ஆதாயம்கிட்டும். இதுவரைபகையாய் இருந்த குடும்ப உறவு அன்புடையதாய் இருக்கும்.

**ரிஷபம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். எண்ணிய காரியங்கள் நிறைவேறாமற்போகும். பிள்ளைகள் சொல் கேளாமல் தன் இச்சைப்படி நடந்து கொள்வார்கள்.

**மிதுனம்** சமபலன் காணப்படுகின்றது. பொருள் வரவு சுமராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்று. பயணத்தின் போது அவதானம் தேவை. வியாபாரத் தொழிலில் சமலாபம் கிடைக்கும்.

**கடகம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். தொழில் உயர்வுகள் கிடைக்கும். வீடு, வாகன யோகம் உண்டாகும். விடுபட்டு போனஉறவுகள்மீண்டும்ஒன்றுசேரும்வாய்ப்புண்டாகும்.

**சிம்மம்** நன்மையான நாள். பணம் தாராளமாகப் புகழுங்கும். குடும்ப ஒற்றுமை உயர்வடையும். சமூக அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். உத்தியோக உயர்வுகள் தானாகவே வந்து சேரும்.

**கன்னி** சஞ்சலமான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் குழப்ப நிலை அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் தோல்வி அடையும். தொழிலில் வெறுப்பும், மனவிரக்தியும் உண்டாகும்.

**துலாம்** அதிஷ்டமானநாள். தனலாபம். குடும்பத்தில்அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதரர்களால் ஆதாயம் கிடைக்கும். பூர்வீக சொத்து வழக்குகள் சுமுகமாக தீர்ந்து கைக்கு வந்துசேரும். மாணவர்களுக்குஅரசினால்உதவிகிடைக்கும்

**விருச்சிகம்** சமபலன் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இரக்கமுமாக இருக்கும். எண்ணிய காரியம் தாமதமாகும். வியாபாரம்லாபமும்நட்டமாகநடக்கும். மாணவர்கள் கல்வியில் சுமாரான முன்னேற்றமடைவார்கள்.

**தனுசு** மேன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழில் எத்தனை போட்டிகள் வந்தாலும் அதனை ஜெயித்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் திறமைகள் வெளிப்படும்.

**மகரம்** குழப்பமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். உடல் நிலை பாதிப்புறும். மன அமைதி குன்றும். தொழிலில் நிறையப் பாடுபட வேண்டிவரும். வீண்அலைச்சல்களால்உடலில்சோர்வுஉண்டாகும்.

**கும்பம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். வியாபாரத் தொழில் விருத்தி அடையும். அரசியல்வாதிகள் மதிப்பு, மரியாதை உயரும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமடைவார்கள்.

**மீனம்** சுபீட்சமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் மிகுந்து சுபீட்சம் உண்டாகும். ஆடை, அணிகலன்கள் சேரும். வீட்டில் சுப காரியம் நடக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும்.

**சந்திராஷ்டம நாள்: அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதங்கள் சதயம், பூராட்டாதி 1 ஆம், 2 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப காரியங்களைத் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# ஸ்கந்தா பழைய மாணவர் ஒன்றுகூடல்





‘ஸ்கந்தவரோதயன்களின் சங்கமம்’ என்னும் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபர் செல்வஸ்தான் தலைமையில் கடந்த சனியன்று மாலை 5.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவர்தாய்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவர்களான ஸ்கந்தவரோதயன்கள் தர்மலிங்கம் சித்தார்த்தன், கணேசவேல், ஐயாத்துரை இராமசாமி, கந்தையா தனபாலசிங்கம், எஸ்.செல்லையா, தம்பிப்பிள்ளை தேவராஜன், திருமதி விஜயலட்சுமி லெட்சுமணன், வைத்தியர் எஸ்.சிவானந்தராஜா ஆகியோரும், பழைய மாணவர் தாய்ச் சங்கப் போசகர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.

அத்துடன் க.பொ.த சாதாரணதரம் மற் றும் உயர்தர பரீட்சைகளில் விசேட சித்திபெற்ற மாணவ, மாணவியரும் கௌரவிக்கப்பட்டார்கள். அத்துடன் சண்டிலிப்பாய் சண் சுருதி இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் கலந்து கொண்டிருந்தார்கள்.

# ஊற்றுப்புலம் குளப் பிரச்சினைக்குத் தீர்வு விரைவில் என்கின்றார் அமைச்சர் அமரவீர




கிளிநொச்சி, ஒக்.08

ஊற்றுப்புலம் குளப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்

ஊற்றுப்புலம் பகுதியில் ஒரு கோடி 90 லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட ஊற்றுப்புலம் குளம் அமைக்கும் பணியை மேற்கொள்வதற்கு வன வளத்திணைக்களம் இடையூறு செய்து நிறுத்தி வைத்திருப்பதாகவும், விவசாயம் மற்றும் நீர்ப் பிரச்சினைக்களுக்கு ஊற்றுப்புலம் குளம் அமைக்கப்பட்டால் தீர்வு கிடைக்கும் என்றும் ஆனால் வனவளத் திணைக்களத்தினர் அதற்குத் தடையாக உள்ளனர் என்றும் தெரிவித்து ஊற்றுப்புலம் கிராம மக் கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற் கொண்டிருந்தனர்.

இந்த விடயம் தமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட போதே விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் சுதந்திரக் கட்சியின் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் இருவரையும் ஊற்றுப்புலம் குளம் அமைக்கும் இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு தகவல்களை அனுப்புமாறு பிரதி விவசாய அமைச்சர் பணித்தமைக்கு அமைவாக நேற்று முந்தினம் பிற்பகல் குளம் அமைக்கும் இடத்திற்கு நேரில் சென்று பார் வையிட்ட பிரதேசசபை உறுப்பினர்கள் குறித்த விடயம் தொடர்பான தகவல்களைப் பிரதி விவசாய அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளனர்

# யுத்த இழப்பீட்டுப் பணியகச் சட்ட வரைவு நாடாளுமன்றில் விவாதத்துக்கு வருகிறது

கொழும்பு,ஒக்.08

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான இழப்பீட்டுப் பணியகத்தை உருவாக்குவதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நாடாளுமன்ற உதவிசெயலாளர் நாயகம் நீல் இத்தாவல இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தச்சட்டமூலத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கான தினம் தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வார நாடாளுமன்ற அமர்வின் இறுதி நாள்களில் இந்தச் சட்ட மூலம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இழப்பீடுகளுக்கான பணியகச் சட்டமூலமானது கடந்த ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த சட்டமூலத்தில் 1987 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, ஆள்கள், சொத்துகள், தொழிற்துறைகளுக்கு புனர்வாழ்வு அளித்து அதிகாரமளிக்கும் சட்டத்தை இரத்துசெய்யும் ஏற்பாடு இடம்பெற்றுள்ளது.

இதற்கான பணியகமானது அரசமைப்புச் சபையினால் பரிந்துரைக்கப்பட்டு, ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

அரசமைப்புச் சபையினால், பரிந்துரைக்கப்பட்டவர்கள் 14 நாள் களுக்குள் ஜனாதிபதியால் நியமிக்கப்படத் தவறின், அவர்கள் அரசமைப்பு சபையினால் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுவர் எனச் சட்டமூலத்தின் 20 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பணியகத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் அமையவேண்டும் எனவும், பிராந்திய அலுவலகங்களை ஸ்தாபிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஹெரோயினுடன் நால்வர் கொழும்பில் கைதாகினர்

## அவர்களில் இருவர் வயோதிபப் பெண்கள்

கொழும்பு,ஒக்.08

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புகளின் இரண்டு வயோதிப பெண்கள் உட்பட நான்கு பேரை ஹெரோயினுடன் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வதுள்ளவத்தை பகுதியில் 415 கிராம் 200 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயினுடன் 60 வயதுடைய ஒரு பெண்ணும், பொரளை பகுதியில் 15 கிராம் 250 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோயினு டன் 60 வயதுடைய மற்றுமோர் பெண்ணும் கைது செய்யப்பட்டனர்.

மேலும் பேலியகொட மீன் சந்தைக்கு அருகில் 4 கிராம் 900 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயினுடன் 39 வயதுடைய ஒருவரும், மாதம்பிட்டி பகுதியில் 5 கிராம் 100 மில்லிகிராம் நிறையுடைய ஹெரேயினுடன் 58 வயதுடைய மற்றுமொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

# மத்திய மாகாண சபையின் ஆயுள் இன்றிரவுடன் முடிவு

## வடமேல் மாகாண சபை புதனன்று பூர்த்தி

கொழும்பு,ஒக்.08

மத்திய மாகாண சபையின் உத்தியோகபூர்வ ஆயுள்காலம் இன்று 8ஆம் திகதி நள்ளிரவுடனும், வட மேல் மாகாணத்தின் உத்தியோகபூர்வ ஆயுள்காலம் நாளை மறுதினம் 10 ஆம் திகதி புதன்கிழமையுடனும் நிறைவடையவுள்ளன.

அத்துடன், வட மாகாணத்தின் உத்தியோகபூர்வ ஆயுள் காலம் எதிர்வரும் 24 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளது.

மாகாண சபைகளின் உத்தியோகபூர்வ ஆயுள்காலம் நிறைவடைந்ததன் பின்னர் அதன் அதிகாரம் மாகாண செயலாளருக்கும், ஆணையாளருக்கும் வழங்கப்படுகின்றது.

இந்த மாகாண சபைகளின் உத்தியோகபூர்வ ஆயுள் காலம் நிறைவடைந்ததன் பின்னர் 06 மாகாணசபைகளுக்கானதேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச சேவைகளில் இனிமேல் ட்ரோன் கமராவின் பயன்பாடு

கொழும்பு,ஒக்.08

அரச சேவைகளில் நிலத்துக்கு மேலாகப் பறந்தபடி படம்பிடிக்கும் ட்ரோன் கமராவைப் பயன்படுத்துவதற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது தொடர்பில், அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளை தெளிவுப்படுத்தும் வேலைத்திட்டமொன்று அமைச்சின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் விசேட நிபுணரான சுமித்த சில்வாவால் ட்ரோன் கமரா தொடர்பான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் அரச நிர்வாக நடவடிக்கைகளுக்காக ட்ரோன் கமரா பயன்படுத்தப்படும் நிலையில், இலங்கையில் இவ்வாறான தொழிநுட்பங்கள் இதுவரை பயன்படுத்தப்படவில்லையென அமைச்சர் வஜிர அபேவர்தன இதன்போது தெரிவித்துள்ளார்.

அனர்த்த நிலைமைகளின் போது, இந்த ட்ரோன் கமராவின் பயன்பாடு மிகவும் முக்கியமென்று தெரிவித்துள்ள அமைச்சர், மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் ஊடாக முன்னெடுக்கப்படும் நிர்வாக நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க ட்ரோன் கமராவை பயன்படுத்த எண்ணியுள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மட்டுவில் முத்துமாரி ஆலயத்தில் நவராத்திரி கால சொற்பொழிவு

சாவகச்சேரி, ஒக். 08

சாவகச்சேரி, மட்டுவில்வடக்கு, சந்திரபுரம் திருவருள் மிகு ஸ்ரீ மஹா முத்துமாரி அம்பாள் ஆலய நவராத்திரி கால விசேட சொற்பொழிவுநிகழ்வுகள் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் 17 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை வரை மாலை 6.30 மணிக்கு சமயஜோதி க.நிஜ லிங்கம் அவர்களின் ஒழுங்க மைப்பில் இடம்பெறவுள்ளன.

முதலாம் நாள் 09 ஆம் திகதி சைவப்புலவர் கந்தசத்திய தாசன் 'விநாயகரும் சக்தியும்' என்னும் விடயப் பொருளிலும், 2ஆம் நாள் சைவப்புலவர் முகுந் தன் 'கும்பபூஜைஉணர்த்தும்தத்துவம்' என்னும் விடயப் பொருளிலும், 3 ஆம் நாள் சைவப்புலவர் செ.த.குமரன் 'வல்லமைதாராயோ' என்னும் விடயப் பொருளிலும், 4ஆம் நாள் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் 'நவராத்திரி உணர்த்தும் சமூகமேம்பாடு' என்னும் விடயப் பொருளிலும், 5 ஆம் நாள் சைவப்புலவர் கா.கமலநாதன் 'அனைத்துமாய் நின்றால்' என்னும் விடயப் பொருளிலும், 06 ஆம் நாள் சிவநெறிச்செம்மல் க. ஈஸ்வரன் 'மகத்துவம் மிக்க புரட்டாதி' என்னும் விடயப் பொருளிலும், 7 ஆம் நாள் சிவநெறிச்செம்மல் நித்தியபாபுதரன் 'மகிடாசுரமர்த்தனி திருவருள்' என்னும் விடயப் பொருளிலும் 08 ஆம் நாள் இளம் சைவப்புலவர் த.மனோஜ்குமார் 'கலைகள் அருள் வாள் கலைவாணி' என்னும் விடயப் பொருளிலும் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்கள்.

# களுத்துறையில் மண்சரிவில் 2 வீடுகள் சேதம்; 4பேர் மீட்பு

களுத்துறை, நேபட உடோவிட பிரதேசத்தில் மூன்று வீடுகள் மீது நேற்று அதிகாலை 4.00 மணிக்கு ஏற்பட்ட மண் சரிவு காரணமாக ஒரு வீட்டுக்குள் சிக்கியிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரை பிரதேசவாசிகள் மீட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தற்பொழுது ஹொரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் இரு வீடுகளுக்குப் பெரியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெறும் வேளையில் ஒரு வீட்டில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 6 வயது பிள்ளை உட்பட ஐந்து பேர் இருந்துள்ளனர். அவர்களில் ஒருவருக்கும் இச்சம்பவத்தில் சிறு காயம் கூட ஏற்படவில்லையெனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட விடயத்தில் முன்னாள் கடற்படைத் தளபதியும் முக்கிய சந்தேகநபராம்!

## குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.08

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவகாரத்தில் முக்கிய சந்தேக நபராக முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரனாகொடவும் இருக்கின்றார் எனக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட விடயம் குறித்து முன்னாள் கடற்படை தளபதிக்கு நன்கு தெரிந்திருந்தது எனக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். இது குறித்த ஆதாரங்களை அவர் மறைக்கின்றார். முக்கிய சாட்சியைக் கூட மௌனமாக்கியுள்ளார் என குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் திருகோணமலையில் உள்ள கடற்படை தளத்தின் இரகசிய வதை முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இது குறித்து முன்னாள் கடற்படை தளபதிக்கு நன்கு தெரிந்திருந்தது. ஆனால் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும் அவர் எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ள குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் இதற்கான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளன எனவும் தெரிவித்துள்ளனர்.

கடத்தப்பட்ட இளைஞர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்த தொடர்புமில்லை என தெரிவித்துள்ள விசாரணையாளர்கள், அவ்வேளை கடற்படைப் பேச்சாளராக இருந்த டீ.கே.பி. தஸநாயக்க மற்றும் சுமித் ரணசிங்க ஆகிய முக்கிய அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த முகாம்களிலேயே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து வசந்த கரணாகொடவின் செயலாளர் சேர்மல் பெர்னாண்டோ இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தார் எனத் தெரிவிக்கும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சேர்மல் பின்னர் இது குறித்து கடற்படை தளபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார் எனவும் தெரிவிக்கின்றனர்.

எனினும் இந்தத் தமிழ் இளைஞர்களை விடுவிப்பதற்கோ அல்லது அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கோ கரணாகொட எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இந்தச்சம்பவம் குறித்து நன்கு அறிந்துள்ள அதிகாரிகளுக்கு வாக்குமூலங்களை வழங்கியுள்ள கடற்படையினரை முன்னாள் தளபதி உன்னிப்பாக கண்காணித்து வருகின்றார் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 11 தமிழ் இளைஞர்கள் விவகாரத்தில் முன்னாள் கடற்படை தளபதியும் முக்கிய சந்தேகநபராக மாறியுள்ளார்.

# கொங்கோ நாட்டில் பெற்றோல் 'டாங்கர்' விபத்தில் 50 பேர் உடல் கருகி பலி!

## 100 பேருக்குத் தீக்காயங்கள்!!



கின்ஷாசா, ஒக். 08

ஆபிரிக்க கண்டத்தின் மத்திய மேற்கு பகுதியில் உள்ள கொங்கோ நாட்டில் நேற்று பெற்றோல் டாங்கர் லொறி வேறொரு வாகனத்தில் மோதிய விபத்தில் 50 பேர் உடல் கருகி பலியாகியுள்ளனர்.

சுமார் 100 பேர் பலத்த தீக்காயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பாதால் இந்த விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ட்ரம்பின் மனைவியை மோதிய குட்டி யானை!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மனைவி மெலானியாவை குட்டியானை ஒன்று துதிக்கையால் இடித்து தள்ளி தாக்கியுள்ளது.


அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மனைவி மெலானியா குழந்தைகள் நலத்திட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஆப்பிரிக்க நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

கென்யா சென்ற அவர் நைரோபியில் உள்ள டேவிட் ஷெல்டிரிக் வன விலங்குகள் சரணாலயம் சென்றார். அங்கு யானைகளுக்கு உணவு வழங்கினார்.

அவரை குட்டியானை ஒன்று தும்பிக் கையால் இடித்து தள்ளி தாக்கியது. இதை எதிர்பாராத அவர் சிறிது தடுமாறி பின்னர் சுதாரித்துக் கொண்டார். நடந்த சம்பவத்தை வாய் மூடி சிரித்து சமாளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமணத்துக்குச் சென்ற வேளை விபரீதம்; வாகனங்கள் மோதி 20 பேர் பரிதாபச் சாவு




அமெரிக்காவில் இடம்பெற்ற கோர விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரு வாகனங்கள் மோதிக் கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை 2 மணியளவில் நியூயோர்க் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

Schoharie நகரில் திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்று, இன்னுமொரு வாகனத்துடன் மோதியமையினால் விபத்து ஏற்பட்டுள்ளது.

இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி வீதிக்கு அருகில் இருந்த மரத்தில் மோதியமையினால் பெருமளவு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் பெயர் விவரங்கள் இன்னமும் வெளியாகவில்லை.

# அமெரிக்கா தனது எதிரிகளை முழு பலத்துடன் தோற்கடிக்கும்!



## ட்ரம்ப் திட்டவட்டம்

வொஷிங்டன், ஒக். 08

அமெரிக்காவில் புதிய பயங்கரவாத எதிர்ப்பு கொள்கையை வெளியிட்ட ஜனாதிபதி ட்ரம்ப், அமெரிக்க அரசு தனது எதிரிகளை முழு பலத்துடன் தோற்கடிக்கும் என திட்டவட்டமாக கூறியுள்ளார்.

அமெரிக்காவில், ஜனாதிபதி ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம் பயங்கரவாதிகளுக்கு எதிராக புதிய கொள்கை ஒன்றை வகுத்துள்ளது. பயங்கரவாதிகளுக்கும், அவர்களை ஆதரிப்போருக்கும் கடும் எச்சரிக்கை விடும் வகையில் உருவாக்கப்பட்டு உள்ள இந்த கொள்கையை ட்ரம்ப் வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் ட்ரம்ப் கூறுகையில், 'பயங்கரவாத எதிர்ப்பு தேசிய கொள்கை வழிகாட்டுதலின்படி, எங்கள் பெரிய தேசத்தை பாதுகாப்பதற்கு அமெரிக்க வல்லரசின் அனைத்து கருவிகளையும் நாங்கள் பயன்படுத்துவோம். அந்தவகையில் அமெரிக்கா, தனது எதிரிகளை முழு பலத்துடன் தோற்கடிக்கும்' என்றார்.

# அமெ. வெளியுறவுத்துறை அமைச்சர் ஜப்பான் பிரதமரைச் சந்தித்தார்!



டோக்கியோ, ஒக்.08

ஜப்பான் சென்றுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ அந்த நாட்டின் பிரதமர் ஷின்சோ அபேவை நேற்று முன்தினம் சந்தித்து பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக ஆலோசித்துள்ளார்.

ஜப்பான், வடகொரியா, சீனா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

வடகொரியா – அமெரிக்கா இடையில் சமீபத்தில் சிங்கப்பூரில் செய்யப்பட்ட அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுவது தொடர்பாக வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை வலியுறுத்துவது அவரது பயணத்தின் அதிமுக்கிய நோக்கமாக உள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் டோக்கியோ நகரில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே மற்றும் மைக் பாம்பியோ சந்தித்து ஆலோசனை நடத்தினர். கொரிய தீபகற்பத்தை அணு ஆயுத அச்சுறுத்தல் இல்லாத பகுதியாக மாற்றிட அமெரிக்க அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு ஷின்சோ அபே ஆதரவு தெரிவித்தார்.

மேலும், வடகொரியா நாட்டில் கைது செய்து, சிறைக்காவலில் அடைக்கப்பட்டுள்ள ஜப்பான் நாட்டினரை விடுதலை செய்வது தொடர்பாக வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னிடம் பேசுமாறு இந்தச் சந்திப்பின்போது மைக் பாம்பியோவை ஷின்சோ அபே கேட்டுக் கொண்டுள்ளார்.

# இம்ரான்கான் மாளிகை மீது முதலில் நடவடிக்கை எடுங்கள்!

## பாகிஸ்தான் நீதிமன்றம் உத்தரவு



இஸ்லாமாபாத், ஒக். 08

ராவல் ஏரியை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள பிரதமர் இம்ரான் கான் வீடு மீது தலைநகர் வளர்ச்சி ஆணையம் முதல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாகிஸ்தான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தின் புறநகர் பானி காலா பகுதியில் ராவல் ஏரி உள்ளது. அதை ஆக்கிரமித்து வசதி படைத்தவர்கள் ஆடம்பர மாளிகைகள் கட்டியுள்ளனர்.

இதனால் ராவல் ஏரி மாசு அடைந்துள்ளது. எனவே பானி காலா பகுதியில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மாளிகைகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதில் விசேஷம் என்னவென்றால் இப்பகுதியில் பிரதமர் இம்ரான்கானின் 5 படுக்கை அறைகள் கொண்ட ஆடம்பர மாளிகையும் உள்ளது. அது சரிவர திட்டமிடாமலும், ஆக்கிரமித்தும் கட்டப்பட்டுள்ளது என புகார் எழுந்துள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் தலைமை நீதிபதி சாகிப் நிசார் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள பிரதமர் இம்ரான் கான் வீடு மீது தலைநகர் வளர்ச்சி ஆணையம் முதல் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆக்கிரமித்து கட்டிய குற்றத்துக்காக இம்ரான் கான் உரிய அபராத தொகையை செலுத்த வேண்டும்.

அதன்பின்னர் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மற்ற வீடுகள் மீது நடவடிக்கையை தொடங்க வேண்டும் என தலைமை நீதிபதி நிஷார் உத்தரவிட்டார். அதற்கு பதில் அளித்த இம்ரான் கான் வழக்கறிஞர் பாபர் அவான் தலைநகர் வளர்ச்சி ஆணையத்தின் நடவடிக்கைக்கு இம்ரான் கான் ஒத்துழைப்பார் என உறுதி அளித்துள்ளார்.

# மக்களைப் பிளவுபடுத்தி ஆட்சி அமைக்க எண்ணுகிறது காங்கிரஸ் என்கிறார் மோடி!



மக்களை பிளவுபடுத்தி ஆட்சி செய்ய காங்கிரஸ் எண்ணுகிறது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், மிஸோரம் ஆகிய 4 மாநில சட்டப்பேரவையின் பதவிக்காலம் இந்த ஆண்டு டிசெம்பருடன் முடிவடைகிறது. இந்த மாநிலங்களுடன், சட்டப்பேரவை கலைக்கப்பட்ட தெலங்கானா மாநிலத்துக்கும் தேர்தல் திகதியை தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் அறிவித்தது.

சத்தீஸ்கரில் முதல் கட்டத் தேர்தல் நவம்பர் 12 ஆம் திகதியும், 2 ஆம் கட்டத் தேர்தல் நவம்பர் 20 ஆம் திகதியும் நடைபெறுகிறது. மத்திய பிரதேசம், மிஸோராம் மாநிலங்களுக்கு நவம்பர் 28 ஆம் திகதியும், ராஜஸ்தான், தெலங்கானாவுக்கு டிசம்பர் 7 ஆம் திகதியும் தேர்தல் நடைபெறுகிறது வாக்கு எண்ணிக்கை டிசம்பர் 11 ஆம் திகதி நடைபெறுகிறது.

இந்த நிலையில் ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் நடந்த பிரமாண்டமான தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்துகொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு –

“காங்கிரஸ் கட்சி கடந்த 60 ஆண்டுகளாக நாட்டை தவறாக வழிநடத்திவந்தது. நாடு தற்போது தான் சரியான பாதையில் பயணிக்கிறது. இதனை அந்த கட்சியால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதிகாரத்தை கைப்பற்ற மக்களை பிளவுபடுத்தி வாக்கு வங்கி அரசியலில் காங்கிரஸ் ஈடுபடுகிறது. மக்கள் உஷாராக இருக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தின் ஆட்சியில் நாடு சிக்கிக் கொள்ளும் ஆபத்து உள்ளது. எதிர்க்கட்சிகள் நாட்டை பிளவு படுத்த விரும்புகின்றன. ஆனால் நாங்கள் ஒற்றுமை படுத்த விரும்புகிறோம். வாக்கு வங்கி அரசியலில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. மக்களை பிளவுபடுத்தி ஆட்சி செய்ய காங்கிரஸ் எண்ணுகிறது. அதற்கு மக்கள் அனுமதிக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நடிகையின் பாலியல் குற்றச்சாட்டு விவகாரம்; நானா படேகர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு!





ஹிந்தி நடிகர் நானா படேகர் தனக்கு பாலியல் தொல்லை கொடுத்தார் என நடிகை தனுஸ்ரீ தத்தா அளித்த புகாரின் அடிப்படையில் நானா படேகர் மீது மும்பை பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

சினிமாவில் நடக்கும் பாலியல் தொல்லைகளை நடிகைகள் உரக்க பேச ஆரம்பித்து உள்ளனர். படுக்கைக்கு அழைத்த நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் பெயர்களை வெளியிட்டு தெலுங்கு நடிகை ஸ்ரீரெட்டி திரையுலகை கதிகலங்க வைத்தார்.

இப்போது தனுஸ்ரீதத்தாவும் பாலியல் ஆசாமிகளுக்கு எதிராக மல்லுக்கட்டி இருக்கிறார். இவர் தமிழில் தீராத விளையாட்டு பிள்ளை படத்தில் கதாநாயகியாக நடித்தவர்.

காலா படத்தில் ரஜினிகாந்துக்கு வில்லனாக நடித்தவர் நானா படேகர். ஹிந்தியில் பிரபலமான நடிகரான இவர் மூன்று முறை தேசிய விருதை வென்றவர் இவர் மீது, ஹிந்தி நடிகை தனுஸ்ரீ தத்தா பாலியல் குற்றச்சாட்டை கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதுகுறித்து தனுஸ்ரீ தத்தா தெரிவிக்கையில் –

கடந்த 2008 ஆம் ஆண்டு 'ஹாரன் ஓகே ப்ளீஸ்' என்ற படத்தின் பாடல் காட்சிகள் படமாக்கப்படும் போது, தகாத இடங்களில் கை வைத்து தனக்கு பாலியல் தொந்தரவு அளித்தார்.

நானா படேகரின் இந்தச் செயலுக்கு படத்தின் தயாரிப்பாளர், இயக்குநர், நடன இயக்குநர் ஆகிய அனைவரும் ஆதரவாக செயல்பட்டனர் என அவர் தெரிவித்தார். இந்த குற்றச்சாட்டுக்கு பின்னர் பொலிவூட் பிரபலங்கள் பலரும் தனுஸ்ரீ தத்தாவுக்கு ஆதரவு அளித்தனர்.

இந்நிலையில், மும்பை ஒஷிவாரா காவல் நிலையத்திற்கு நேற்று முன்தினம் சென்ற தனுஸ்ரீ தத்தா, நடிகர் நான படேகர் மீது புகார் அளித்தார். அவரது புகாரை ஏற்றுக்கொண்ட பொலிஸார் நானா படேகர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## குறிப்பிட்ட சில பணக்காரர்களுக்காக மட்டுமே உழைக்கிறது பா.ஜ.க: ராகுல்காந்தி குற்றச்சாட்டு!




மத்திய பிரதேசத்தில் ஆதிவாசி பழங்குடியின மக்கள் நடத்திய நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற ராகுல்காந்தி, ஒரு சில பணக்காரர்களுக்காக மட்டுமே பா.ஜ.க. உழைக்கிறது என குற்றம்சாட்டியுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் நவம்பர் 28 ஆம் திகதி சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்த தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பரபரப்பான பிரசாரங்களையும், தேர்தல் வேலைகளையும் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. துவங்கி விட்டன.

நேற்று முன்தினம் ஆதிவாசி எக்தா பரித் என்ற அமைப்பு நடத்திய நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்றார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஆதிவாசிகளுக்கான சட்டத்தில் புதிய திருத்தங்கள் கொண்டு வரப்படும். மேலும், தான் 2004 ஆம் ஆண்டு முதல் அரசியலில் இருக்கிறேன். எப்போதாவது ஒவ்வொருவரின் வங்கிக்கணக்கிலும் 15 லட்ச ரூபா போடுவேன் என பொய் வாக்குறுதி அளித்தது இல்லை .

2016 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பணமதிப்பிழப்பீடு நடவடிக்கை மூலம் கறுப்பு பணங்கள் சட்டபூர்வமாக மாற்றப்பட்டது. யாரும் கைதும் செய்யப்படவில்லை யாரும் 15 லட்சம் பணமும் பெறவில்லை.

மேலும், மத்திய பா.ஜ.க. அரசு, பணக்காரர்களுக்காக மட்டுமே பணியாற்று கிறது. அப்படியே இருந்தாலும் கூட, ஏழைகளுக்கும், பழங்குடியின மக்களுக்காகவும் சற்று உழைக்குமாறும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

## வேறு சாதி ஆண் மகனை விரும்பியமையால் யுவதியை மரத்தில் கட்டி வைத்த பஞ்சாயத்து!

வேறு சாதி ஆணை விரும்பினார் என்றுகூறி 18 வயது இளம்பெண்ணை பஞ்சாயத்து சார்பில் மரத்தில் கட்டி வைத்த சம்பவம் பிஹாரில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பிஹார் கிராமம் ஒன்றில் உள்ள 18 வயது இளம்பெண், வேறு சாதி ஆணை விரும்பியுள்ளார். அவரின் காதலைப் பெற்றோர் எதிர்த்தனர்.

இதனால், தான் விரும்பிய நபருடன் இளம்பெண் சென் றுள்ளார். அவரைத் தேடிக் கண்டுபிடித்த பெற்றோர், அவரைப் பஞ்சாயத்தில் ஒப்படைத்தனர்.

அப்பெண் கிராமத்தை அவமதித்துவிட்டார் என்று கூறி, பஞ்சாயத்துத் தலைவர்கள் அவரை ஊர்ப் பொதுவில் உள்ள மரத்தில் கட்டிவைத்தனர். இதுவே அவருக்கு வழங்கப்படும் தண்டனை என்று கூறி மணிக் கணக்கில் நிற்கவைத்தனர். அவரின் அருகில் சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் நின்று வேடிக்கை பார்க்கின்றனர்.





இதுதொடர்பான புகைப்படங்களும் வீடியோக்களும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. அதில் இளம்பெண் மயக்கமடைந்த நிலையில் கட்டிவைக்கப்பட்டிருக்கிறார். மற்றொரு புகைப்படத்தில் ஒருவர் இளம் பெண்ணின் தலைமுடியைப் பிடித்து இழுக்கிறார்.

இதுகுறித்து 'ஏ.என்.ஐ.' செய்தி நிறுவனத்திடம் பேசிய பெண்ணின் தந்தை, ”அவள் குற்றவாளி என்பதால் கட்டி வைக்கப்பட்டிருக்கிறாள். அவள் வேறு சாதி ஆணுடன் செல்ல விரும்பினாள்” என்று தெரிவித்துள்ளார். தகவல் அறிந்த பொலிஸார் இளம் பெண்ணை மீட்டு, விசாரணை நடத்திவருகின்றனர்.

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு இடமளிக்கபோகின்றீர்களா?

– இப்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த போது அவரிடம் நேரடியாகவே சொன்னார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகிய முன்னாள் அமைச்சர்மார் பலரின் தீவிர முயற்சியால் இந்தச் சந்திப்பு அமைச்சர் எஸ்.பியின் பத்தரமுல்ல இல்லத்தில் நடைபெற்றது.

சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இடம்பெற்ற இந்த சந்திப்பில் மஹிந்தவுடன் அவரது சகோதரர்கள் பஸில் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரும் இருந்தனர்.

சில எம்.பிக்கள் அங்கு இருந்தாலும் அவர்கள் வேறு ஓர் அறையில் இருந்தனர். இரவு உணவு வெளியில் இருந்து தருவிக்கப்பட்டது.. கோப்பியா, தேநீரா என்று எஸ்.பி. ஆரம்பத்தில் கேட்டதும் அங்கு சிரிப்பலை ஏற்பட்டது. (இறுதியாக அப்பம் சாப்பிட்டு, கோப்பி அருந்திய பின்னரே மைத்திரி மஹிந்தவை விட்டு வெளியேறினார்). எல்லோரும் ஆளை ஆள் பார்த்து விட்டு 'க்ரீன் டீ குடிப்போமே!' – என்றனர். தேநீர் தயாரானது.

அதன் பின்னரே பேச்சு ஆரம்பமானது.

ராஜபக்ஷக்கள் மீதான அரசியல் பழிவாங்கல் குறித்தும், கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கைது குறித்தும் மஹிந்த விவரிக்கத் தொடங்கினார்.

மக்கள் சக்தி எங்களிடம் இருப்பதைப் பார்த்துப் பிரதமர் பயப்படுகின்றார். எங்களை முடக்க சதி நடக்கின்றது. அதன் ஓர் அங்கம்தான் இந்தக் கைதுகள் எல்லாம். எவ்வளவு குற்றச்சாட்டுக்கள், பழிகள். ஏதாவது இது வரை நிரூபிக்கப்பட்டுள்ளதா? ஆக, அரசியல் காரணமாக எல்லாம் நடக்கின்றன என்று சொன்ன மஹிந்த தனது விளக்கத்தைத் தொடர்ந்தார்.

பொருளாதாரத்தைப் பாருங்கள். சீரழிந்து போய் உள்ளது. டொலர் ஏற்றத்தைத் தடுக்க சிறந்த முகாமைத்துவம் இல்லை. தேர்தல் ஒன்றுக்குச் சென்று பாருங்கள். மக்கள் பதில் சொல்லுவார்கள். நாட்டு நிலைமையை சீராக்க எங்களை உதவும்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நமது ஆள்கள் என்னிடம் கேட்கின்றனர். நாட்டைச் சீரழித்த ரணிலின் ஆட்சி தொடர உதவ முடியாது. அப்படி எங்களின் ஆதரவு தேவையானால் இந்த அரசில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலக வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் அவர்கள் தொடர்ந்தும் இருக்க முடியாது என்று கூறியபடி பஸிலின் பக்கம் திரும்பினார் மஹிந்த. பஸில் தொடர்ந்தார்.

அப்படி நினைத்தபடி அரசுக்கு ஆதரவளிக்க முடியாது. நாங்கள் எங்களது கட்சியின் கீழ்மட்டத் தொண்டன் வரை இதுபற்றிப் பேச வேண்டும். அவர்களின் கருத்துக்களைக் கேட்க வேண்டும். இன்றும் கூட உங்களை மதிக்கும் வகையில்தான் நாங்கள் வந்தோம். எங்களது அரசியல் வாதிகளை, தொண்டர்களை, வீதியில் நிறுத்த முயற்சித்த ரணிலின் இந்த அரசை எந்த முகத்தைக் கொண்டு நாங்கள் ஆதரிப்பது? எங்கள் உறுப்பினர்கள், எமக்கு ஆதரவளித்த மக்கள் என்ன சொல்கிறார்களோ அதனையே நாங்கள் செய்வோம். – என்று இதுவரை வைத்திருந்த அதிருப்தி எல்லாவற்றையும் தனக்கே உரிய பாணியில் எடுத்துத் தன் பங்குக்குப் பொரிந்து தள்ளினார் பஸில்.

அதன்போது குறுக்கிட்ட மஹிந்த –

நாங்கள் இப்போதுள்ள நிலைமையில் கட்சியுடன் பேசாமல் எதனையும் செய்ய முடியாது. அதற்கு முன்னர் உண்மையில் சுதந்திரக் கட்சி இந்த அரசில் இருந்து வெளியேற வேண்டும். சுதந்திரக் கட்சி அரசில் இருந்து வெளியேற வேண்டுமென ஒரு தீர்மானம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி நிறைவேற்றப்படவுள்ளதாக அறிந்தேன். அப்படி நிறைவேறினால் அதன் பின்னர் நீங்கள் ஒரு முடிவை எடுங்கள். பின்னர் யோசிக்கலாம் – என்றார்.

எல்லாவற்றையும் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரி, நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் மோசமடைந்து வருவது தனக்கு கவலையளிப்பதாகக் குறிப்பிட்டார்.

இதன்போது, ஜனாதிபதிக்கு எதிராக செய்யப்பட்ட சதி தொடர்பில் குறிப்பிட்ட கோட்டாபய, அதன் பாரதூரத்தன்மையை விளக்கினார். அதை மஹிந்த விவரமாக மைத்திரியிடம் எடுத்துரைத்தார்.

ஜனாதிபதி ஒருவருக்கு எதிரான சதி என்பது இலேசான விடயமல்ல. அது தேசத்துரோகத்துக்கு ஒப்பானது. ஆனால், உடனே இதுபற்றி பிரதமரோ, பொலிஸ்மா அதிபரோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுவரை இல்லை.

நாங்கள் உங்களுடன் அரசியல் ரீதியாக எதிர் என்றாலும் இப்படியாக அற்பமாக நாங்கள் ஒருபோதும் எண்ணியதில்லை. உங்களுக்கு ஓர் அனர்த்தம் நடந்தால் அடுத்து அரசியல் எப்படியாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். கோட்டாபயவும் அந்த அச்சுறுத்தலில் சிக்கியுள்ளார். பாதுகாப்பு அமைச்சரான நீங்கள் இதில் அமைதியாக இருந்தால் மக்கள் கூட இது ஏதோ சாதாரண விடயம் என்று நினைப்பார்கள். நீங்கள் இதன் உண்மைத் தன்மையை கண்டறியுங்கள் என்றார் மஹிந்தர்.

ஆமாம் நானும் நடப்பவற்றை கவனித்துக்கொண்டுதான் இருக்கின்றேன். கோட்டாபயவின் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்துமாறு பாதுகாப்புச் செயலரை பணித்துள்ளேன் என்றார் மைத்திரி.

கூட்டு எதிரணியின் விசேட கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது. இடைக்கால அரசு ஒன்றுக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பதை பற்றி அதில் பேசுவோம் என்று மஹிந்த கூறிய கையோடு பேச்சும் முடிவுக்கு வந்தது.

அனைவரும் உணவை ஒன்றாக அருந்தினர். பின்னர் ஜனாதிபதி மைத்திரி முதலில் வெளியேறினார்.

பின்னர் அங்கிருந்த எம்.பிக்களுடன் சற்று அளவளாவிய பின்னர் மஹிந்தவும் அங்கிருந்து புறப்பட்டார்.

இந்தச் சந்திப்புக்கள் முடிந்த பின்னர் மஹிந்தவும் பஸிலும் பிறிதொரு இடத்தில் தனியே சந்தித்து நீண்ட மந்திராலோசனை நடத்தினர். இனிவரும் காலங்களில் இந்த விடயங்களை பஸில் ராஜபக்ஷவே கையாள இங்கு தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நடைபெறவுள்ள போராட்டம் தொடர்பில் மாவை மேலும் கூறுகையில் –

சிறையிலுள்ள 65 தமிழ் அரசியல் கைதிகள், தங்களது விடுதலையை வலியுறுத்தி, உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் 12 தமிழ் அரசியல் கைதிகளும், வெலிக்கடை மகசின் சிறைச்சாலையில் 43 தமிழ் அரசியல் கைதிகளும், கண்டி தும்பர சிறைச்சாலையில் 10 பேருமாக இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, இவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவும் தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வடக்கிலும் கிழக்கிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இருப்பினும் அரசு எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் இருக்கின்றது.

இவ்வாறு அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு மௌனம் சாதித்து வருமானால் சர்வதேச சமூகத்தை நாடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

இந்நிலையில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கொழும்பில் இவ்வாரம் பாரிய போராட்டம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம் – என்றார்.

இது குறித்து அடைக்கலநாதன் எம்.பி. கூறுகையில் –

அரசியல் கைதிகள் விடயத்தில் இனியும் அரசு காலம் தாழ்த்த முடியாது. ஜனாதிபதி இது தொடர்பில் விரைவில் தீர்க்கமான முடிவு ஒன்றை முன்வைக்க வேண்டும் என வலியுறுத்தும் கோரிக்கை ஒன்றை முன்வைப்பதற்காக கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் இடம்பெறும். இதில் அரசியல் கைதிகள் குறித்து உறுதியான முடிவெடுக்கப்படும் – என்றார். (ஐ)

## டி.ஐ.ஜி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ ஆகியோரைப் படுகொலை செய்வதற்குச் சதித்திட்டம் தீட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில், பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா எந்நேரத்திலும், கைது செய்யப்படலாம் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்தப் படுகொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பில், பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவின் குரல், அரச பகுப்பாய்வு திணைக்களத்தினால் பரிசோதனை செய்யப்பட்டிருந்தது. இதன்போது, குறித்த அழைபேசி உரையாடலில் உள்ள குரல், நாலக சில்வாவின் குரல்தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆகவே, பிரதிப் பொலிஸ்மா அதிபர் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் எனப் பொலிஸ் உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மைத்திரியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை எஸ்.பி. திஸாநாயக்கவின் வீட்டில் நடைபெற்றது என்றும், இடைக்கால அரசு அமைப்பது குறித்து இதன்போது பேசப்பட்டது என்றும் தகவல்கள் கசிந்திருந்தன.

பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதையடுத்து கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் மேற்படி சந்திப்பின்போது பேசப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக மஹிந்தவிடம், ஊடகவியலாளர்கள் நேற்று கேள்விகளை எழுப்பினர்.

"அவ்வாறானதொரு சந்திப்பு நடைபெறவில்லை. அது அப்பட்டமான பொய்யாகும்" – ஒற்றை வரியிலேயே பதிலளித்துவிட்டு பறந்தார் மஹிந்த. (ஐ)

## நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்றக் கட்டடம் அமைந்துள்ள தியவன்னா ஓயாவின் பகுதியில் நீர்மட்டம் உயர்வடைந்துவருகின்றது. இதனால், வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்குள் வெள்ளம் புகுந்துவிடும் என்ற அச்சத்தில் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி நாடாளுமன்ற நுழைவாயில் மற்றும் சுற்றுப்புறங்களில் படையினர் மணல் மூடைகளை அடுக்கியுள்ளனர். அவசர நிலைமைகளைச் சமாளிக்கும் வகையில் அனர்த்த முகாமைத்துவக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

தியவன்ன ஓயாவில் வெள்ளம் ஏற்பட்டு நீர்மட்டம் அதிகரித்ததால், நாடாளுமன்றத்துக்குள் 1992ஆம் ஆண்டும், 2010ஆம் ஆண்டும் வெள்ளம் நுழைந்து சேதங்களை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக களு மற்றும் ஜின் கங்கைகளுடன், அத்தனுகலு ஓயாவை அண்டி வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இன்றைய தினமும் கனமழை எதிர்ப்பார்க்கப்படுவதனால், குறித்த கங்கைகளில் நீர்மட்டம் அதிகரிப்பது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

களனி கங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது. இதன் காரணமாக களனி, கொலன்னாவை, பியகமை, கடுவலை முதலான பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீடாக, கொண்டு வரப்படும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் வரைவை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

அதேவேளை, 2019ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்துக்கான, நிதி ஒதுக்கீட்டு சட்ட வரைவை, நாளை நிதியமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தவாரம் புதன்கிழமை பத்தரமுல்லவில் உள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவின் இல்லத்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

இதன்போது, அடுத்த தேர்தல் வரை பரந்துபட்ட, கூட்டணியின் கீழ் கண்காணிப்பு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயப்பட்டது. இந்தப் பேச்சுக்களில், பஸில் ராஜபக்ஷவும் கலந்து கொண்டுள்ளார்.

இந்தப் பேச்சுக்கள் வெற்றியளித்தால், கண்காணிப்பு அரசின் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்படுவார்.

அடுத்த சுற்றுப் பேச்சுக்கள், இரண்டு வாரங்களின் பின்னர் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை சீஷெல்ஸ் நாட்டுக்கு 3 நாள்கள் பயணமாக செல்லும் ஜனாதிபதி சிறிசேன, அங்கிருந்து திரும்பிய பின்னர், போலந்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணங்களின் பின்னர், இரண்டு வாரங்களில், மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை அவர் சந்திப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, கண்காணிப்பு அரசாங்கம் தொடர்பாக நேற்று முன்தினம் பேருவளையில் கருத்து வெளியிட்ட மஹிந்த ராஜபக்ஷ, நாட்டை விற்றவர்களுடன், கண்காணிப்பு அரசை அமைக்க முடியாது என்று கூறியுள்ளார். இப்படி அவர் குறிப்பிட்டது ஐக்கிய தேசியக் கட்சியையே என்று நோக்கர்கள் தெரிவித்தனர்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராமத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமட்செவன எனும் யாவருக்கும் புகலிடம் என்ற கொள்கையின் அடிப்படையில் மாவட்டங்கள் தோறும் சகலவசதிகளையும் கொண்ட மாதிரி கிராமங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சாவகச்சேரி மந்துவில் பகுதியில் நாவலர் கோட்டம் என்னும் பெயரில் அமைக்கப்பட்டுவந்த அனைவருக்கும் நிழல் (செமட்ட செவண) 135 ஆவது மாதிரிக் கிராமம் நேற்று பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கன் வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ பிரதம அதிதியாக கலந்துகொண்டு இந்த வீடுகளை பயனாளிகளிடம் கையளித்தார்.


மாதிரிக்கிராமத்திற்கான பெயர்பலகையை திரைநீக்கம் செய்த அமைச்சர் சஜித்பிரேமதாச, புதிய வீடுகளையும் நாடாவெட்டி திறந்து வைத்தார்.

இந்த நாவலர் கோட்டம் எனும் மாதிரி கிராமத்திற்கு தலா பதினெட்டு லட்சம் நிதியில் 29 புதிய வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றிற்கு தேவையான குடிதண்ணீர், நீர் மற்றும் மின்சார வசதிகள், உள்ளகப் பாதை வசதி, பிரவேச பாதை வசதிகள் என்பனவும் ஏற்படுத்திகொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 700 பயனாளிகளுக்களிற்கு வீடமைப்பு கடன்களுக்கான முதற்கட்ட காசோலையானது 24.5 மில்லியன் ரூபா செலவில் வழங்கப்பட்டதுடன் 15 பயனாளிகள் சொந்துரு பியசகடன்களுக்கான காசோலை வழங்கப்பட்டது. இது 3 மில்லியன் ரூபா செலவில் வழங்கப்பட்டது.

அதேபோல ஒன்பது லட்சம் பெறுமதியான 138 சில்பசவிய பயிலுனர்களுக்கு அதன் நன்மைகள் வழங்கப்பட்டதுடன் கண்பார்வை பாதிக்கப்பட்ட 79 பேருக்கு மூக்குகண்ணாடிகளும் அமைச்சரினால் இங்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, எம்.ஏ சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன், அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# குருபெயர்ச்சிப் பலன்கள்

## 04.10.2018 முதல் 28.10.2019 வரை

**விளம்பி வருட குருப்பெயர்ச்சி கடந்த 4 ஆம் திகதி இரவு 10.05 மணிக்கு இடம்பெற்றது. குருபகவான் துலா இராசியிலிருந்து விருச்சிக இராசிக்கு மாறுகிறார். பன்னிரண்டு இராசிக்காரர்களுக்குமான பலன்கள் தொடர்ந்து வெளியாகும்.**



## தனுசு

**(மூலம், பூராடம், உத்தி ராடம் 1ஆம் பாதம்)**

**கிரகநிலை:**
ஒக்டோபர் – 04 – 2018 அன்று இரவு 10.05 மணிக்கு குரு பகவான் லாபஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறியுள்ளார்.

**பலன்:**
குடும்பத்தில் சில சஞ்சலங்களாலும், தொழிலில் சில மனஸ்தாபங்களாலும் சிரமப்பட்டு வந்த தனுசு ராசி அன்பர்களே, இந்த குரு பெயர்ச்சியால் சில நல்ல பலன்களைப் பெறப்போகிறீர்கள்.

குரு பகவான் உங்களின் லாப ஸ்தானத்தில் இருந்து விரய ஸ்தானத்திற்கு வருகிறார். இதன் மூலம் உங்களின் சுகஸ்தானத்தையும், ரண ருண ரோக ஸ்தானத்தையும் மற்றும் அஷ்டம ஆயுள் ஸ்தானத்தையும் பார்க்கிறார். ஜென்ம சனியால் ஏற்படும் சில இடர்பாடுகளை குரு பகவான் நிவர்த்தி செய்வார். எனினும் உங்கள் ராசிக்கு மறைந்து பன்னிரெண்டில் சஞ்சாரம் செய்வதால் சுப விரயங்களைத் தருவார்.

குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்சினைகள் மறையும். உங்கள் பேச்சைக் கேட்காதவர்களும் உங்களிடம் ஆலோசனை கேட்பார்கள். தாயார் தாய் வழி உறவினர்கள் உங்களுடன் உறவாடவரலாம்.

அவர்களுடனான பிரச்சினைகள் அனைத்தும் தீரும். தாயின் உடல் நிலையில் இருந்து வந்த பிரச்சினைகள் அனைத்தும் சரியாகும். உங்கள் மனதில் இருந்து வந்த சந்தேகங்களுக்கு விடை கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள்.

தொழில் – வியாபாரத்தைப் பொறுத்த வரை சில புதிய முதலீடுகளைச் செய்வீர்கள். அவை பிற்காலத்தில் லாபம் தரக்கூடியனவாகவே இருக்கும். கவலை வேண்டாம். நீங்கள் எதிர்பார்த்திருந்த கடன் கிடைக்கும். இதன் மூலம் தொழிலை விரிவு செய்வீர்கள். உங்களுக்குப் போட்டியாக இருந்தவர் கள் அனைவரும் விலகி விடுவார்கள்.

**உத்தியோகத்தர்களுக்கு -**
லாப மான காலமாக இருக்கும். எதிர்பார்த்திருந்த இடமாற்றம் கிடைக்கும்.

குடும்பத்தை விட்டு பிரிந்து சில காலம் வெளியூரில் தங்க நேரிடலாம். உடல் நிலையில் இருந்து வந்த பின்னடைவு சரியாகும்.

**பெண்களுக்கு -**
காரியங்களில் வெற்றி கிடைக்கும். தாய் வழி உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

உடல் நலனில் முன்னேற்றம் உண்டாகும். தீராத நோயினால் அவதிப்பட்டவர்களுக்கு தீர்வு கிடைக்கும். வேலை செய்பவர்களுக்கு சலுகைகள் கிடைக்கும்.

'மாணவர்களுக்கு கல்விக்குத் தேவையான அனைத்து உதவிகளும் கிடைக்கும். கல்விக் கடன் கிடைக்கப்' பெறுவீர்கள். உங்கள் படிப்பிற்காக விலை உயர்ந்த பொருள் ஒன்றை வாங்குவீர்கள்.

**அரசியல்துறையினருக்கு:**
சாதகமான காலமாக இருக்கும். பண வரவு எதிர்பார்த்த படி இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் இருக்கும். உங்களை விமர்சனம் செய்து வந்த எதிரிகள் காணாமல் போவார்கள்.

**கலைத்துறையினருக்கு:**
தங்களின் முன்னேற்றத்திற்காக செலவிட வேண்டி இருக்கும். மேலும் வாய்ப்புகளும் தேடி வரும் என்பதால் கவலை வேண்டாம்

**மூலம்:**
இந்த குரு பெயர்ச்சியில் பண வரவிற்குக் குறைவிருக்காது. குடும்ப ரீதியாகவோ, தொழில் ரீதியாகவோ முக்கிய முடிவுகள் ஏதேனும் எடுக்க வேண்டி இருந்தால் அதை இப்போது எடுக்கலாம். திருமண பேச்சு வெற்றி பெறும்.

**பூராடம்:**
இந்த குரு பெயர்ச்சியில் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சிறு உபாதைகளாக இருந்தாலும் மருத்துவரை அணுகி சிகிச்சை எடுத்து வருவது தான் சிறந்தது.

எதிர்பாராத திருப்பம் வந்து மனதிற்கு தொல்லை ஏற்படுத்தக் கூடும்.

**உத்திராடம் 1ஆம் பாதம்:**
இந்த குரு பெயர்ச்சியில் நிதி நிலைமை திருப்தி தரும். செலவுகள் அதிகமாக ஏற்பட்டாலும் அதை சுலபமாக சமாளித்து விட முடியும். கணவன் – மனைவியிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதரரால் பிரச்சினை ஏற்பட வாய்ப்புகள் அதிகம். கவனம் தேவை.

**பரிகாரம்:-**
வியாழக்கிழமை தோறும் நவ கிரக குருபகவானுக்கு விளக்கேற்றி வழிபட தூக்கத்தில் இருக்கும் பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.



## மகரம்

**(உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங் கள் திருவோணம் அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்)**

**கிரகநிலை:**
ஒக்டோபர் – 04 – 2018 அன்று இரவு 10.05 மணிக்கு குரு பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறியுள்ளார்.

**பலன்:**
குடும்பப் பிரச்சினைகளாலும், உடல் அசௌகரியத்தாலும் அவதிப்பட்டு வந்த மகர ராசி அன்பர்களே,

இந்த குரு பெயர்ச்சியில் குரு பகவான் உங்கள் ராசிக்கு தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு வருகிறார். இதன் மூலம் அவரது பார்வை தைரிய ஸ்தானம், பஞ்சம பூர்வபுண்ணியஸ்தானம் மற்றும் களத்திர ஸ்தானத்தின் மீது விழுகிறது. இதனால் குடும்பம் மற்றும் தெய்வீக காரியங்களில் நல்ல பலன்களைப் பெறப் போகிறீர்கள்.

குடும்ப ஸ்தானத்தை சனி பகவான் பார்த்தாலும் அவரே குடும்பாதிபதி ஆனதால் சிறு பிரச்சினைகளை மட்டும் சந்தித்து வந்தீர்கள். தற்போது குருபகவானின் ஒன்பதாம் பார்வை உங்களின் களத்திர ஸ்தானத்தின் மீது படிவதால் அந்த பிரச்சினைகளும் தீரும். நிம்மதி அடைவீர்கள்.

தொழில் –வியாபாரம் சிறப்பான முறையில் நடைபெறும். ராசியாதிபதி உங்கள் தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதாலும், அவரே தொழில் காரன் ஆனதாலும் தொழிலில் எந்த வித இடையூறும் இருக்காது. நீங்கள் நினைத்த லாபம் கிடைக்கும். எதிரிகள் விலகிச் செல் வார்கள்.

**உத்தியோகஸ்தர்களுக்கு:**
உங்களின் சிறந்த பணிக்கான விருதுகள் கிடைக்கப் பெறுவார்கள். மேலிடம் உங்களைப் பாராட்டும் அளவிற்கு உங்கள் வேலை இருக்கும். பண உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

பெண்களுக்கு சின்ன சின்ன உதவிகள் தாராளமாக கிடைக்கப் பெறுவீர்கள். தேவையான பொருள்களுக்கு தடை வராது. கணவன் – மனைவிக்கிடையே சின்ன சின்ன ஊடல்கள் வந்து போகும்.

**மாணவர்களுக்கு :**
படிப்பில் கவனக் குறைவு ஏற்படும். கனவுகளுக்கு இடம் கொடுக்காமல் என்ன நிஜம் என்பதை புரிந்து கொண்டு நடந்து கொள்ளுங்கள். வாழ்க்கைக்கும் அது வெற்றியைக் கொடுக்கும்.

**அரசியல்துறையினருக்கு:**
கட்சியில் நல்ல பலன்களை உங்களுக்கு சாதகமாக எதிர்பார்க்கலாம்.

சில விசயங்கள் உங்கள் மனதிற்கு கசப்பாக இருந்தாலும் அதை தாங்கிக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு செல்வீர்கள்.

**கலைத்துறையினருக்கு**
எதிர்பார்த்திருந்த இடத்திலிருந்து அழைப்புகள் வரலாம். பெரிய நிறுவனங்கள் உங்களின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்வதற்கு வாய்ப்புள்ளது. சில ஆவணங்களை படித்துப் பார்த்து கையெழுத்திடுங்கள்.

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:**
இந்த குரு பெயர்ச்சியில் பிடித்த மானவர்களைச் சந்திக்க நேரலாம். அதனால் மனதிற்கு மகிழ்ச்சி உண்டாகும். சக பாகஸ்தர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடியவரை வீண் விவாதங்களில் ஈடுபடாமலிருப்பது நல்லது.

**திருவோணம் :**
இந்த குரு பெயர்ச்சியில் சிக்கனமாக நடந்து கொள்வது அவசியமாகிறது. நெருங்கிய நண்பர்களுடன் சண்டை சச்சரவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பண உதவி எதையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் கிடைப்பதற்கான சாத்தியக்கூறு அதிகம் உள்ளது.

**அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்:**
இந்த குரு பெயர்ச்சியில் பிள்ளைகள் விவகாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். திருமண வயதில் பிள்ளைகள் இருந்தால் அவர்கள் திருமணம் நிச்சயிக்கப்படலாம். விரக்தி மனப்பான்மையை விட்டொழியுங்கள்.

**பரிகாரம்:**
சனிக்கிழமை தோறும் சிவபெருமானை வழிபட பணம் சம்பந்தமான பிரச்சினைகள் தீரும்.

# 'நாவலர் கோட்டம்' மாதிரிக் கிராமம் மந்துவிலில் சஜித் திறந்து வைத்தார்








யாழ்ப்பாணம்,ஒக்.08

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் ஆலோசனையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மந்துவில் பகுதியில் அமைக்கப்பட்ட 'நாவலர் கோட்டம்' எனும் மாதிரிக் கிராமம் நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

135 ஆவது மாதிரிக் கிராமமாக அமைக்கப்பட்டுள்ள இதன் வீடுகளை வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பொது மக்களிடம் உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்தார்.

அரசாங்கத்தின் ஏற்பாட்டில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் ஆலோசனையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நாட்டின் பல இடங்களிலும் மாதிரிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமையவே 135 ஆவது மாதிரிக் கிராமமாக சாவகச்சேரியில் நாவலர் கோட்டம் எனும் மாதிரிக் கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மாதிரிக் கிராமத்தை அந்த மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது. இதன் போது மாதிரிக் கிராமத்திற்கான பெயர்பலகையை திரை நீக்கம் செய்து வைத்த அமைச்சர் சஜித் பிரேமதாசா இந்த கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகளையும் நாடா வெட்டித் திறந்து வைத்து மக்களிடம் கையளித்தார்.

இதனைத் தொடர்ந்து புதிதாக உருவாக்கப்பட்ட நாவலர் கோட்டம் கிராமத்தில் இதன் நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந் நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

'சமட்டசெவன' எனும் யாவருக்கும் புகலிடம் என்ற கொள்கையின் அடிப்படையில் மாவட்டங்கள் தோறும் சகல வசதிகளையும் கொண்ட மாதிரி கிராமங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 135ஆவது மாதிரிக் கிராமமாக 'நாவலர் கோட்டம்' திறந்து வைக்கப்பட்டது.

இவ் வீட்டுத் திட்டத்தில் புதிதாக 29 வீடுகளுக்கான உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. அதே போன்று அபிவிருத்தி செய்யப்பட்ட 29 காணித்துண்டுகள் ஒரு கோடி எண்பது லட்சம் ரூபா செலவில் வழங்கப்பட்டன.

700 பயனாளிகளில் 490 பேருக்கு வீடமைப்பு கடன்களுக்கான காசோசலை மொத்தம் 2கோடி 45 லட்சம் ரூபாவுக்கு வழங்கப்பட்டது.

15 பயனாளிகள் சொந்துருபியச கடன்களுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. இதன் பெறுமதி 30 லட்சம் ரூபாவாகும்.

69 லட்சம் ரூபா பெறுமதியான 138 சில்பசவிய பயிலுனர்களுக்கு அதன் நன்மைகள் வழங்கப்பட்டன. . 16 பயனாளிகளுக்கு யூம்ய வங்கியால் சுயதொழில் கடன் 24 லட்சம் ரூபா செலவில் வழங்கப்பட்டது.

அத்துடன் 79 பேருக்கு கண் பார்வை குறைந்தவர்களுக்கான மூக்கு கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டன. .இதேவேளை மேற்படி நாவலர் கோட்டக் கிராமத்தில் நீர் மற்றும் மின்சார வசதி, உள்ளக பாதை வசதி, பிரவேசப் பாதை வசதி ஆகியனவும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன.

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அச்சுவேலியில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்

அச்சுவேலி, ஒக்.08

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும்அரசியல்கைதிகளுக்குஆதரவு தெரிவித்தும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அச்சுவேலி பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

குறுகிய கால புனர்வாழ்வு வழங்கியாவது தங்களை விரைவில் விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த மாதம் 14 ஆம் திகதியளவில் அனுராதபுரம் சிறைச்சாலையில் எட்டு அரசியல் கைதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட உணவுத் தவிர்ப்புப் போராட்டமானது 24 நாள்களைத் தாண்டியும் தொடர்கின்ற நிலையில், தற்போது கண்டி, புதிய மகஸின் சிறைகளிலும் உள்ள அரசியல் கைதிகளும் இணைந்து முன்னெடுக்கப்படும் பாரிய போராட்டமாக அது விரிவடைந்துள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துகின்ற யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள இக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் இப் பிரதேசத்தைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்களையும், மனிதநேயமுள்ள சமூக செயற்பாட்டாளர்களையும் கலந்துகொள்ளுமாறு அவர்கள் அழைப்புவிடுத்துள்ளனர்.

## ரயிலுடன் மோதி 3 யானைகள் சாவு




வெலிகந்தைப் புனாணைப் பிரதேசத்தில் ரயிலுடன் மோதி 03 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன. இச்சம்பவம் சனிக்கிழமை இரவு 10.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இரவு நேர 'மீனகயா' கடுகதி ரயில் புனாணை ரயில் நிலையத்தை அடைவதற்கு இரண்டு கிலோ மீற்றர் தூரம் இருக்கும் போது அசேலபுர என்ற இடத்தில் யானைக் கூட்டம் ஒன்றின் மீது மோதியுள்ளது.

இதன்போது மூன்று காட்டு யானைகள் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளன. அதே நேரம் ரயில் தடம் புரண்டதால் மக்களின் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து விபத்து இடம் பெற்ற இடத்திற்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டு மாற்றுப் போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டன.

## வவுனியாவில் கிணற்றில் இருந்து மூன்று மாத யானைக்குட்டி மீட்பு



வவுனியா, ஒக்.08

வவுனியா, கலாபோகஸ்வெவ பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து 3 மாத யானைக்குட்டி ஒன்று வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு சிங்களப் பிரதேசசபைக்குட்பட்ட கலாபோகஸ்வெவ, நாமல்கம பகுதியில் உள்ள வீடு ஒன்றில் உள்ள கிணற்றில் இரவு தவறி விழுந்த நிலையில் 3 மாத யானைக் குட்டி ஒன்றை அவதானித்த வீட்டு உரிமையாளர், இது தொடர்பில் பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்திற்குத் தகவல் வழங்கியமையை அடுத்து அப்பகுதிக்குக் காலையில் வருகை தந்த வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் அந்த யானைக் குட்டியை மீட்டு காட்டுக்குள் விட்டனர்.

இந்தக் குட்டி யானை தனது தாய் யானையுடன் வந்திருந்த நிலையில் மின்சார வேலி காரணமாகத் தாய் யானை திரும்பிச் செல்ல, குட்டி யானை மக்கள் குடியிருப்புக்குள் புகுந்து கட்டி முடிக்கப்படாத கிணற்றில் தவறி விழுந்திருக்கலாம் என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.